# யாழ். மாநகரசபைக் கூட்டம் 15 நிமிடத்தில் முடிவடைந்தது!


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 315
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 9 ஷவ்வால் 24 வியாழக்கிழமை (24-12-70)



நத்தார் - புத்தாண்டு
பண்டிகையை முன்னிட்டு
உங்கள் குழந்தைகளுக்காக
விசேஷமாக வரவழைக்கப்பட்ட
றெடிமேட் உடுப்புக்கள்
எல்லா அளவுகளிலும்
கண்கவர் கலர்களிலும்
மலிவான விலைகளில் கிடைக்கும்.
இன்றே விஜயஞ் செய்யுங்கள்!
கணேசானந்தாஸ்
(முட்டாசுக்கடை சந்தி)
208, கே.கே.எஸ். றேட், யாழ்ப்பாணம்.


## இராஜசூரியர் மௌனம்

— சபை நிருபர் யோகி —

யாழ்ப்பாணம், வியா.

திரு. இராஜசூரியர் சபையிலிருந்து வெளியேற மறுத்து 1-ம் வட்டாரத்திற்குரிய ஆசனத்தில் மௌனமாக இருக்க எவ்வித பிரச்னையுமின்றி, கீழே காத்திருந்த பொலிஸாருக்கும், எதுவித சிரமமும் கொடுக்காமல், 15 நிமிடத்தில் யாழ்ப்பாண மாநகரசபை பொதுக் கூட்டத்தை கடுகதி வேகத்தில் நேற்று நடத்தி முடித்தார் மேயர் திரு. துரைராஜா.

திரு. ஏ. ஜி. இராஜசூரியர் நேற்று பிற்பகல் 3 மணிக்கே சபையில் வந்து அமர்ந்திருந்தார். பொதுமக்கள் கலரியில் ஏராளமான பார்வையாளர்கள் வந்திருந்தனர். சபைக்கு வெளியில் இன்ஸ்பெக்டர் ஒருவரும் மூன்று பொலிஸ் கன்ஸ்ரபிள்களும் காணப்பட்டனர்.

3-15 மணிக்கு திரு. இராஜசூரியருக்கு ஒரு டெலிபோன் கோல் வந்தது அவர்சபையிலிருந்து வெளியேறி டெலிபோனில் கதைத்துவிட்டு மீண்டும் சபைக்குள் சென்று அமர்ந்தார். சில நிமிடத்தின் பின் ஒரு வாலிபர் அவசரமவசரமாக வந்து திரு. இராஜசூரியரிடம் ஏதோ கூறினார்.

கமத்திலுள்ள நல்லதம்பி என்ற ஊழியர் இருதய நோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததாகவும் அவர் இறந்து விட்டதாகவும் இந்நேரம் தான் அங்கிருந்திருந்தால், அவரை சில சமயம் காப்பாற்றியிருக்கலாமென்றும் திரு. இராஜசூரியர் மற்றொரு உறுப்பினருக்கு பின்னர் கூறிக்கொண்டிருந்தார்.

பிற்பகல் 3-20 மணிக்கு சபைக்கு வெளியில் எவரும் நிற்கக் கூடாதென மாநகர சபை ஊழியர் தெரிவித்தனர். அதனால் எல்லாரும் கலரிக்கு சென்றனர். 3-25 மணிக்கு கமிஷனர் சபைக்குள் வந்து, சபைக்குள்ளே எவரும் படம் பிடிக்கக் கூடாதென தெரிவித்தார்.

3-30 மணிக்கு அழைப்பு மணி அடிக்கப்பட்டது. உறுப்பினர்கள் சபைக்குள் வந்துகொண்டிருந்தனர். 3-35 மணிக்கு மீண்டும் ஒரு தடவை அழைப்பு மணி அடிக்கப்பட்டது.

3-37 மணிக்கு மேயர் வந்து தமது ஆசனத்தில் அமர்ந்து சபையை நோக்கி ஒரு கண்ணோட்டம் விட்டார். 1-ம் வட்டார ஆசனத்திலிருந்த திரு. இராஜசூரியரை ... கூட்டத்தை ஆரம்பித்தார். கூட்டம் முடியும்வரை திரு. இராஜசூரியர் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

ஒரு கட்டத்தில் திரு. தம்பு கந்தையாவுக்கும் திரு அந்தோனிப்பிள்ளைக்குமிடையில் காரசாரமான விவாதம் நடைபெற்றபோது மேயர் தலையிட்டு இருவரையும் அமரச்சொன்னார்.

நிதிக்குழு சிபார்சுகளை ஒவ்வொன்றாக ஆலோசிக்க வேண்டுமென திரு தம்பு கந்தையா கூறியபோது ஏற்கப்பட்டுவிட்டதாக மேயர் கூறினார்.

திரு தம்பு கந்தையா: சர்வாதிகாரமாக நடக்கக் கூடாது. சட்டப்படி நடக்க வேண்டும் இது எப்பொழுது ஏற்கப்பட்டது? யார் பிரேரித்தது?

திரு அந்தோனிப்பிள்ளை: நான்தான் நிதிக்குழு சிபார்சுகளை ஏற்கும்படி பிரேரித்தேன்

திரு தம்புகந்தையா: 'ஷட்டப்' ஊழல் நிறைந்தது இந்த நிர்வாகம் இங்குள்ளது மடையர் கூட்டம்

திரு அந்தோனிப்பிள்ளை: அக்கூட்டத்தில் நீரும் அடங்கியிருக்கிறீர்

மேயர்: சத்தம்போடாமல் இருவரும் இருங்கள்.

திரு தமபு கந்தையா: எந்த உபவிதிப்படி நிதிக்குழுசிபார்சுகளை ஓரேயடியாக ஏற்றுக்கொள்வது? ஒவ்வொரு விஷயமாக விவாதிக்கப்படவேண்டும்

திரு தெய்வேந்திரன்: ஒவ்வொரு விஷயமாக விவாதிக்கவேண்டும்

திரு தம்புகந்தையா; நிதிக்குழு சிபார்சுகளை ஒவ்வொரு விஷயமாக விவாதிக்கவேண்டும் ஒழுங்குமுறைக்குமாறாக நடக்கக்கூடாது ...

# ஹஜ் யாத்திரிகர்களுக்கு அனுமதி: குறித்த தொகையினரே செல்லலாம்

## விசாரணைக் குழுவின் அறிக்கைக்குப் பின் பிரதமர் உத்தரவு

கோட்டை புதன்

ஹஜ் யாத்திரிகர் மெக்காவுக்குச் செல்வதற்கு அனுமதி கோரி பல சங்கங்களும் இஸ்லாமிய இயக்கங்களும் செய்து கொண்ட வேண்டுகோளை அடுத்து அரசாங்கம் அனுமதிகொடுத்துள்ளது

இலங்கை வாழ் ஹஜ் யாத்திரிகர்கள் 175 பேரை மெக்காவுக்குச் செல்ல அரசாங்கம் அனுமதித்துள்ளது

இலங்கையிலிருந்து ஹஜ் யாத்திரையை மேற்கொள்ளும் யாத்திரிகர்களின் ஒழுங்... மித்த குழுவின் ஆலோசனைப்படியும் இலங்கை நிதிமந்திரி டாக்டர் என் எம் பெரேராவின் அனுமதிப்படியும் இலங்கைப் பிரதமர் உத்தரவை பிறப்பித்துளார்

இந்தயாத்திரிகர்கள் கடல் மார்க்கமாகவே மெக்காவுக்குச் செல்லவேண்டும் கப்பல் நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு யாத்திரிகர்களின் தேவைகள் நாணய மாற்று மற்றும் வசதிகளையும் இதற்கென நியமிக்கப்பட்ட குழு யாத்திரிகர்களுக்கு வழங்கவுள்ளது. ஒழுங்குகளுக்குகல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மஹ்மூத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்

ஹஜ் யாத்திரைக்குச்செல்பவர்களுக்கு 100 பவுண் வழங்கப்பட்டுள்ளது யாத்திரிகர் முதன்முதலாக மெக்காவுக்குச் செல்பவராகவும் 45 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருக்கவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது

ஜனவரி 22-ந்திகதி கப்பல் புறப்படுகின்றது கப்பலில் மார்க்கசம்பந்தமான உதவிக்காக ஒரு மௌலவி கூடச் ...



## தேசிய சுவீப் மானிப்பாயில் நடைபெறும்

யாழ்ப்பாணம், வியா

அடுத்த மாதம் 24-ம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்ட தேசிய சுவீப் சீட்டிழுப்பு விழா மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

## கரம்பன் மூதாட்டி கொலை

### சம்பவ இடத்தில் துப்பறியும் நாய்கள்

துள்ளது

இலங்கைவாழ் ஹஜ் யாத்திரிகர்கள்175 பேரை மெக்காவுக்குச் செல்ல அரசாங்கம் அனுமதித்துள்ளது

இலங்கையிலிருந்து ஹஜ் யாத்திரையை மேற்கொள்ளும் யாத்திரிகர்களின்ஒழுங்குகள் பற்றி பிரதமர் நியகுச் செல்லவேண்டும் கப்பல் நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு யாத்திரிகர்களின் தேவைகள் நாணய மாற்று மற்றும் வசதிகளையும் இதற்கென நியமிக்கப்பட்ட குழு யாத்திரிகர்களுக்கு வழங்கவுள்ளது,

ஹஜ் யாத்திரிகர்களின் குச் செல்பவராகவும் துக்கு மேற்பட்டவராகவும் இருக்கவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது

ஜனவரி 22-ந்திகதி கப்பல் புறப்படுகின்றது கப்பலில் மார்க்கசம்பந்தமான உதவிக்காக ஒரு மௌலவி கூடச் செல்லவிருக்கிறர்

# கொடிகாமம் ராசு கொலைவழக்கில் எதிரிகள் மூவரும் விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

கொடிகாமம் இராசு கொலை வழக்கில் எதிரிகள் மூவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர், சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா மூவரையும் விடுதலைசெய்து தீர்ப் பளித்தார்:

இவ்வழக்கில், கொடிகாமத்தில் ஆறுமுகம் கனகரத்தினம் அல்லது இராசு என்பவரை கொலைசெய்ததாக, சின்னப்பொடி கந்தையா, எஸ். வல்லிபுரம், செ சற்குணநாதன் ஆகியோர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் எஸ். தம்பித்துரை, அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம், புறக்டர் என் அருணசலத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர்கள்.



சென்னை மியூசிக் அக்கடமியின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இசைவிழாவில் இலங்கை இளம் பாடகி செல்வி பிரமீளாவின் இன்னிசை 26-12-70 ல் நடைபெறும். இந்நிகழ்ச்சிக்கு இசைவாணி டாக்டர் எம். எஸ். சுப்பலட்சுமி தலைமை தாங்குகிறர். முதன் முதலாக தமிழகத்து இசைவிழாவில் கலந்துகொள்ளும் இலங்கை இளம் பாடகி எ ற பெருமைக்காளாகிறர் இவர். பதினறு வயதுடைய செல்வி பிரமீளாவின் முதலாவது இசையரங்கேற்றம் 1969-ம் ஆண்டு முன்னுள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தலைமையில் நடைபெற்றது. இவர் இலங்கையில் ஸ்ரீ பி. எஸ். மணி ஐயங்கரிடமும் தமிழ்நாட்டில் ஸ்ரீ. வி. கே. கோவிந்தராவிடமும் சிட்சை பெற்றவர்.

## கரம்பன் மூதாட்டி கொலை

### சம்பவ இடத்தில் துப்பறியும் நாய்கள்

யாழ்ப்பாணம் வியா

கரம்பனில் மூதாட்டி சிசிலியா கொலை சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை

துப்புத் துலக்குவதற்காக அநுராதபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கெனி ஜெனிவல் என்ற இரு பொலிஸ் நாய்களும் சம்பவம் நடந்த இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டன ஊர்காவற்றுறை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி பி கிருஷ்ணபிள்ளை இக்கொலைபற்றி விசாரணை செய்துவருகிறர்.

3-37 மணிக்கு மேயர் வந்து தமது ஆசனத்தில் அமர்ந்து சபையை நோக்கி ஒரு கண்ணேட்டம் விட்டார். 1-ம் வட்டார ஆசனத்திலிருந்த திரு. இராஜசூரியரை கண்டு விட்டார் மேயர்.

'ஒரு புறத்தி மனிதர் சபையில் இருக்கிருர். அவரை வெளியில் போக சொல்கிறேன்'-இப்படி கூறிஞர் மேயர்.

'நான் பேசலாமா?' என்று கேட்டார் திரு. இராஜசூரியர்.

'மிஸ்டர் இராஜசூரியர் வெளியில் போய்விடுங்கள்' என்ருர் மேயர். அதன்பின் தமது பார்வையை மறுபக்கம் திருப்பிய மேயர் 'நாங்கள் கூட்டத்தை ஆரம்பிப்போம்' என்றுகூறிவிட்டு

திக்கவேண்டும்

திரு தம்புகந்தையா; நிதிக்குழு சிபார்சுகளை ஒவ்வொரு விஷயமாக விவாதிக்கவேண்டும் ஒழுங்குமுறைக்குமாருக நடக்கக்கூடாது

திரு தெய்வேந்திரன்; நிதிகுழு சிபார்சுகளை ஒவ்வொரு விஷயமாக விவாதிக்கவேண்டுமென நான்பிரேரிக்கிறேன்

திரு தம்பு கந்தைய்யா; நான் அனுமதிக்கிறேன்

இதைத்தொடர்ந்து நிதிக்குழு சிபார்சுகள் ஒவ்வொன்ருக ஆலோசிக்கப்பட்டு எவரும் மறுப்பு தெரிவிக்காததால் ஏற்றுக்கொள்ளப்பட்டது இதன்பின்6 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது பிற்பகல் 3 50 மணிக்கு கூட்டம் முடிவடைந்தது

கொடிகாமம்

## ஐயா கொலை வழக்கு 28-ம் தேதி தீர்ப்பு

யாழ்ப்பாணம், வியா

கொடிகாமம் பஸ் சாரதி வேலு கொலைவழக்கு தீர்ப்பு இம்மாதம் 28ம் தேதி வழங்கப்படவிருக்கிறது.

இவ்வழக்கு நேற்றுக் காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே விக்னராசா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் இவ்வருடம் மார்ச் 21ம் தேதி பஸ் சாரதியான சின்னப்பொடி வேலு அல்லது ஐயா என்பவரைக் கொலை செய்ததாக தம்பிமுத்து கணேசமூர்த்தி, தம்பிமுத்து நவரத்தினம், பெருமாள் இராமலிங்கம் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் ஜே ஏ பி செரிபியும், 2ம் 3ம் எதிரிகள் சார்பில் அட்வக்கேட் ஆர் தம்பிரத்தினமும் புறக்டர் எஸ் பி மயில்வாகனத்தின் அனுசரணையுடன்ஆஜராஞர்கள்.

மாதிரி படம் வரைபவரான சரத்சந்திர பெரேரா ஜெயசூரியா நேற்று சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவம் நடந்த இடமான கொடிகாமம் சந்திக்கு படம்வரைவதற்காக இவ்வருடம் மார்ச் மாதம் 21ம் திகதி சென்றேன். இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் இடங்களைச் சுட்டிக்காட்டிஞர் இந்த சம்பவத்தையிட்டு அவர் விசாரணை நடத்திஞர் சார்ஜண்ட் தாமோதரமும் பின் சில இடங்களை காட்டிஞர். நான் ஒரு தராதரம் பெற்ற படம்வரைபவர்.

அட்வக்கேட் செரீபிம் சாட்சியமளித்த ஜெயசூரியாவைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ' இன்ஸ்பெக்டர்துரைசிங்கமும், சார்ஜண்ட் தாமோதரமும் இடங்களைச் சுட்டிக்காட்டிஞர்கள்?-ஆம்

வழ! குமாரசாமி தம்பி ஐயா, வேலு குணரத்தினம், சண்முகம் ஆகியோர் எந்த இடத்தையும் காட்டவில்லை?-இல்லை.

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வக்கேட் ஜே ஏ பி செரிபிம் அட்வக்கேட் எஸ் தம்பிரத்தினம் ஆகியோர் தொகுப்புரை நிகழ்த்திஞர்கள் மாஜிஸ்திரேட் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 28ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அடுத்தமாதம்

## மரண அறிவித்தல்

### பொன்னம்மா

யாழ்ப்பாணம் பொலிஸ் காரியாலயத்தைச் சேர்ந்த கணக்காளர் திரு இராமலிங்கம் பொன்னம்பலத்தின் அருமைத்தாயார் பொன்னம்மா காலமாகிவிட்டார். அன்னரது பூதவுடல் ஈமக்கிரியைக்காக நாயன்மார்காடு இல்லத்திலிருந்து 24-12-70 வியாழக்கிழமை மாலை நாலு மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உல்லாசப் பிரயாணிகள் விடுதி

## 2 ஆண்டுகளில் 5 கோடி வருமானம் கிடைக்கலாம்

கோட்டை.புதன்

அடுத்த ஆண்டு உல்லாசப்பிரயாணிகள் விடுதியிலுல் 3 1/2 கோடி ரூபாவருமானம் கிடைக்குமெனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

இந்தஆண்டுஇரண்டரைக் கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது' 1972-ம் ஆண்டு 5கோடிரூபா வருமானமாகக் கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது' இத்தவருமானத்தை மேலும் விஸ்தரிக்கும் நோக்கமாக மொத்தமாக உள்ள 1024 ஹோட்டல் அறைகளைவிட மேலும் ஆயிரக்கணக்கில் புதிய ஹோட்டல் அறைகளை ஸ்தாபிப்பதற்கு கப்பல் துறை உல்லாசப் பிரயாணிகள் அமைச்சு உல்லாசப்பிரயாணிகள் சபைக்கு அதிகாரமளித்துள்ளது,

இந்தவருடம் வெளிநாட்டு விருந்தினர்கள் 51,400 பேர் வருகை தந்துள்ளதாகவும், அடுத்த வருடம் இத்தொகை 66.700 ஆக அதிகரிக்கும் எனவும் கணக்கெடுக்கப்பட்டுள்ளது 1972-ம்ஆண்டு இத்தொகை 88.200 ஆக அதிகரிக்கும் எனஎதிர்பார்க்கப்படுகிறது!

## கரோல் விழா

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை கல்வி கலைகலாச்சாரக் காப்புக் கழகத்தின் நத்தார் பண்டிகை 'கரோல்' விழா நேற்று முதல் ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

கரோல் பாடும் குழுவினர் தொடர்ந்து 6 நாட்களுக்கு அழைக்கும் இல்லங்கள் தோறும் சென்று பாடல்கள் பாடுவார்கள்.

யாழ் தேர்தல் ஆட்சேப மனு

## தீர்ப்பை ஆட்சேபித்து துரையப்பா அப்பீல்

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணம் தேர்தல் ஆட்சேப மனுமீது நீதியரசர் பண்டித குணவர்த்தன அளித்த தீர்ப்பை ஆட்சேபித்து திரு அல்பிரட் துரையப்பா பிரிவிக்கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்துள்ளார் திரு துரையப்பா சார்பில் குரு ஈ ஆர் எஸ் ஆர் குமாரசாமி கியூ ஸி இந்த அப்பீல் மனுவை இன்று தாக்கல் செய்தார்

யாழ்ப்பாணம் எம் பி யாக திரு சி எக்ஸ் மார்ட்டின் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து அவருடன் போட்டியிட்ட மற்ருெரு அபேட்சகரான திரு துரையப்பா தாக்கல் செய்த மனுவை யாழ்ப்பாணத்தில் விசாரணை செய்த நீதியரசர் பண்டித குணவர்த்தன தள்ளுபடிசெய்ததுதெரிந்ததே இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்தே இப்போது அப்பீல் செய்யப் செய்யப்பட்டுள்ளது

ஜி. ஸி. ஈ. (சாதாரண) பரீட்சை

## மேலும் 4 விஞதாள்கள் வெளியாகியுள்ளன?

கொழும்பு. புதன்

இப்போது நடந்துகொண்டிருக்கும் ஜி ஸி ஈ (சாதாரண) பரீட்சையில் மேலும் நான்கு விஞத்தாள்கள் வெளியாகியுள்ளதாக இரகசிய பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்துவிளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பரீட்சைகளும் ரத்துச் செய்யப்பட்டு பின்னர் நடைபெறலாமெனவும்அறியப்படுகிறது.

எண்கணிதப் பரீட்சை விஞத்தாள்கள் வெளியானதைத் தொடர்ந்து அப்பரீட்சை ரத்துச் செய்யப்பட்டு இன்ஞெரு திகதியில் நடைபெறவிருப்பது தெரிந்ததே.

மேலும் விஞத்தாள்கள் வெளியாகவில்லையென்றும் தேச விரோதசக்திகள் இப்படியான புரளிகளைக் கிளப்பி விட்டுள்ளனரென்றும் அப்படி விஞத்தாள்கள் மேலும் வெளியாகியிருந்தால் அவை ரத்துச் செய்யப்பட்டு பின்னர் நடைபெறுமென்றும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். ஜி ஸி ஈ (சாதாரண) பரீட்சையை நடாத்துவதற்கு 25 லட்சம் ரூபாய் செலவாகுவதாவும் அவர் கூறிஞர்.

## வீரர் ரேசாவுக்கு வரவேற்பு

கோட்டை, புதன்

பாங்கொக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் 2 தங்கப் பதக்கங்கள் பெற்றுச் சாதனையை நிலைநாட்டிய வீரர் லூஸியன் ரோசா இன்று இலங்கை திரும்பிய போது அமோக வரவேற்பு வழங்கப்பட்டது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வீரர் ரோசா வந்திறங்கிய போது விளையாட்டுத்துறை அமைச்சர் திரு கேபி ரத்ஞயக்கா மாலைசூட்டி அவரை வரவேற்ருர், அமைச்சர் உரையாற்றுகையில் இளஞ் சந்ததியினர் ரோசாவின் சாதனையைப் பின்பற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

......

### அவசரகால நிலைமை நீடிக்காது

கோட்டை, புதன்

நாட்டில் இருக்கும் அவசரகால உத்தரவு இம்மாதம் 25-ந் திகதிக்குப்பின் நீடிக்கபடமாட்டாதெனத் தெரியவருகிறது வரவு-செலவுத் திட்டத்தில் கூறப்பட்ட அம்சங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசரகால உத்தரவு அவசியமில்லையென்று நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா கருதுவதிஞலேயே இம்முடிவு எடுக்கப்படுகிறதெனை அறியவருகிறது

கண்டி, புதன்

பாரம்தூக்கும் இயந்திரம் இளம் என்ஜினியர் ஒருவரைப் பலி கொண்டது. மகாவலிகங்கை அபிவிருத்தித்திட்டத்தைச் சேர்ந்த 28 வயதான ஆர். ஏ பெரேரா என்பவரே இவ்விதம் பரிதாபமரணத்துக்குள்ளாகியவராவர்.

## உள்ளூராட்சிமன்றங்களுக்கு அதிக அதிகாரம் கிடைக்கும்

### உதவி அமைச்சர் தகவல்

கோட்டை,புதன்

உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும். இதற்கான சட்டங்கள் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இத்தகவலை உள்ளூராட்சி பொதுநிர்வாக, உள்நாட்டு அமைச்சின் உதவிஅமைச்சர் திரு. நீல் டி அல்விஸ் வெளியிட்டார்.

மக்கள் அரசாங்கத்தின் புதிய திட்டத்தன்கீழ் உள்ளூராட்சி மன்றங்கள் கூடிய அதிகாரம் வகிக்கவுள்ளன, உள்ளூராட்சி மன்றங்களுக்குக்கூடிய அதிகராங்களை வழங்குவதற்கான சட்டங்கள் தயாராகின்றன என்ருர் உதவி அமைச்சர்,

மொரட்டுவையில் புதிய இரு மின்சார நிலையங்களைத் திறந்துவைத்து உள்ளூராட்சி. பொதுநிர்வாகஉள்நாட்டமைச்சின் உதவி அமைச்சர் திரு.நீல் டி அல்விஸ் பேசிஞர்'

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில்; 'உள்ளூராட்சி மன்றங்களே தங்கள் பகுதிகளின் தேவைகளைக் கவனிக்கத்தக்கவகையில் அரசாங்கம் தற்போதைய உள்ளூராட்சி மன்ற விதிகளை மாற்றியமைக்கிறது எனவும் இதஞல் உள்ளூராட்சி மன்றங்கள் அரசாங்கம் இதுவரை காலமும் கவனித்த சில விடயங்களை மேற்கொள்ளுமென்வும் கூறிஞர்

## தொழிலாளருக்கு பல்கலைக்கழகத்தில் பயிற்சி

கோட்டை, புதன்

அடுத்த ஜனவரியிலிருந்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் 50 தொழிலாளர்களுக்கு முதியோர் கல்வி போதிக்கப்படும். கல்வி முறையை மாற்றி அமைக்கும் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது,

இந்தத்திட்டத்தின் மூலம் தொழிலாளர்கள் நவீன தொழில் நுட்ப வளர்ச்சிகள் பற்றிய புதிய அறிவு பெறவும் நாட்டின் வளர்ச்சியில் அதிகப் பங்கு ஏற்கவும் வழி பிறக்குமென்றுகல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. பிரேமதாஸ உடுகம தெரிவித்தார்.

(சி பி. ஏ.

கல்வி வெளியீட்டு திணைக்கள

## ஆய்வுக்குழு அறிக்கை

கோட்டை, வியாழ..

கல்விவெளியீட்டுத்திணைக்களத்தின் வகைப்படுத்தல் மொழி பெயர்ப்பு வேலைகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க கல்வி அமைச்சிஞல் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை நேற்று பகல் 2-30 மணிக்கு கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்திடம் சமர்ப்பித்தது.

இக்குழுவுக்கு இலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு பி.ஏ பர்ஞண்டோ தலைமை வகிக்கிறர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

மாடு, ஆடு முதலிய மிருகங்கள் விற்கலாம், வாங்கலாம். போயா முன்தினம், போயா விடுமுறை நாட்களில். ப. நாகராசா, ஆலாத்திவெளித் தோட்டம், அரசினர் உணவுப் பண்டகசாலைக்கு அண்மையில், நாவற்குளி. 2589

### விற்பனைக்கு

13 அடி நீளம் 7 1/2 அடி உயரமுள்ள தனி முதிரை அலுமாரியும் வேறு சோக் கேஸ், பிருக்கிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், சு. வையாபுரி, மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி. 2590

உஷா தையல் மெசின் (Stream lined) புதியது விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். மனேச்சர், பெருமாள் கோயில், யாழ்ப்பாணம். 2600

### கல்வி

யாழ் நுண்கலைத் தொழிற் பாடசாலை, 426, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். பின்வரும் பாடங்கள் கற்பதற்குப் பிரவேச விண்ணப்பங்கள் 5-1-71 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். 1. மோட்டார் இயந்திரவியல் (1 வருடம்) மோட்டார் கார், ஸ்கூட்டர், டீசல் எஞ்சின், வாட்டர் பம்புகளில் செய்முறையிலும், படி முறையிலும் விசேட பயிற்சி அளிக்கப்படும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு "டிப்ளோமா" (Diploma) அளிக்கப்படும். 2. தையல் "டிப்ளோமா" (1 வருடம்). சகல விபரங்களுக்கும் காரியாலயத்தில் நேரடியாகவோ, அல்லது 10 சத முத்திரையும் விலாசமுமுடைய தபாலுறை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். சிவ உ. சோமசேகரம் (கௌரவ தலைவர்) இ. சபாலிங்கம் (கௌரவ காரியதரிசி) 2588

### பயிற்சி

மோட்டார் றீ வைண்டிங் தமிழில் பயிற்சி அளிக்கப்படும். வகுப்புகள் ஆரம்பம் 1-1-1971. விபரங்களுக்கு: இன்டஸ்றியல் கிராப்ட்ஸ் இன்ஸ்ரிரியூட், 443/5, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2584

### தேவை

பின்னணிப் பாடகி:
சினிமாவில் பின்னணி பாடக்கூடிய பாடகி பிறந்த திகதியுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு 30-12-70க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். சங்கீத டைரக்டர், அறை இல: 16, பரணி ஹோட்டல், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2602

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா—அசோகன் நடித்த
# மாட்டுக்கார வேலன்

மனோஹரா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் போயா 4 காட்சிகள்
என். டி. ராமராவ், கே. ஆர். விஜயா, ராஜ்ஸ்ரீ நடித்த
# லக்ஷ்மி கடாட்ஷம்

ராஜா - யாழ். நகர்
தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30

- O சகல மதத்தினருக்குமான தீந்தமிழ் சித்திரம்
- O ஓசன்னா பாட்டுக்கான இசை அமைப்பு தேன்போன்றது
- O கடலின்மேல் ஏசுநாதர் நடப்பது, பாலைவனம்-குன்று ஆகியவற்றில் ஏசுநாதர் உபதேசம் செய்வது அருமையாக இருக்கின்றன.
- O சலோமை அர்ச். ஜோவானின் தலையைக்கேட்டு ஆடும் கவர்ச்சி நடனத்தைப் பார்க்கத் தவறாதீர்கள்.

# ஏசுநாதர்-தமிழ்

இப்படத்துடன் பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில் 40 நிமிடங்கள் வரை காண்பிக்கப்படும்.

## சட்டக் கல்லூரி பரீட்சை முடிவுகள்

கோட்டை, செவ்.

கொழும்பு சட்டக்கல்லூரி புறக்கட, அட்வகேட் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த தமிழ் மாணவர்களின் விபரம் வருமாறு:

### புறக்டர்

#### புகுமுகப் பரீட்சை

(பழைய சட்டம்)

முதற்பிரிவு: எஸ். ரவிந்திரன், வி. மயில்வாகனம், ஆர். விக்னேஸ்வரன்.

2-ம் பிரிவு: கே எஸ். முத்துக்குமாரசாமி, எஸ். நாகராஜா, ஜி.பி பற்றிக், ஆர். சிவகணேஷன், எஸ், சுந்தரலிங்கம், டி. எம். சுவாமிநாதன், ஏ தம்பாபிள்ளை, செல்வி ஜி ஆர் விஸ்வலிங்கம், வி யோகேஸ்வரன்.

### அட்வகேட்

#### புகுமுகப்பரீட்சை

(பழையசட்டம்)

2-ம் பிரிவு சே. பத்மநாதன்.

### அட்வகேட்

#### புகுமுகப்பரீட்சை

(புதியசட்டம்)

2-ம் பிரிவு: ஆர். பாலச்சந்திரன், பி. காராளசிங்கம், கே. முருகேசு, ஆர். ரவீந்திரா, ரி. செல்வரத்தினம், சி. சிதம்பரப்பிள்ளை, செல்வி. பி சிற்றம்பலம், ஆர். தவராசா.

### உபகாரச் சம்பளம் பெற்றோர் விபரம்

(பழையசட்டம்)

செல்வி.பி சரவணமுத்து, [600 ரூபா). எஸ். ரவீந்திரன் (450 ரூபா) ஜே எஸ் தில்லைநாதன் (500) வி. மயில்வாகனம் (30 ரூபா வீரகூரியா பரிசு).

### புதிய சட்டம்

எஸ் மித்திர கிருஷ்ணன்

## புதிய நிர்வாகிகள்

உடும்பராய், புதன்

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சம்மேளன யாழ். உலோகத்தொழிற்சாலை ஊழியர்கள் தங்களது முதலாவது ஆண்டு பூர்த்தி விழாவை கொண்டாடினர்.

வடபிரதேச தொழிற் சங்கத் தலைவர் திரு. எஸ். நடராசா, காரியதரிசி: திரு. எம். பரமானந்தம், அமைப்பாளர் திரு. எஸ் செல்வராசா, திரு ஐ. ஆர். அரியரத்தினம் ஆகியோரும் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டனர்.

விழாவின் முடிவில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது.

தலைவர்: கே. மகேந்திரன் உபதலைவர்: எம். நாகராசா, காரியதரிசி: ஜி. ஆரோக்கியநாதன், உப காரியதரிசி: க. அம்பிகைபாகன். தனாதிகாரி: இ நாகராசா. 6 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது

0 0 0

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைவர் வண. பிதா ரி ஜே மதுரநாயகம் தலைமையில் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் கூடியபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வண. பிதா. ரி ஜே மதுரநாயகம், உபதலைவர்கள்: திருவாளர்கள்: ஈ கனகலிங்கம் என் எஸ் தாக்கி, பி எப் சேவியர், பி மகேந்திரன், என் தேபாலசுந்தரம், எஸ் மயில்வாகனம், செயலாளர்: திரு ஏ ஜோன், உபசெயலாளர்: திரு சற் சிங்கராஜர், பொருளாளர்: திரு ஜோசவ் மனுவல்.

12பேர்களைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (தே நி)

## ஓய்வு பெறுகின்றார்

ஒட்டுசுட்டான், புதன்

ஒட்டுசுட்டான் பகிரங்க வேலைப்பகுதி மேற்பார்வையாளராக கடந்த பதினைந்து வருடங்களாக கடமைபுரிந்த திரு. தம்பு கந்தையா இம்மாதம் 31ம் திகதி தமது 55-வது வயதுமுடிவில் அரச சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார்.

## இன்றைய

# அரசாங்கத்தை ஆதரித்து வடக்கில் பிரசாரக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

அரசாங்கத்தின் கொள்கைகளை ஆதரித்து வடபகுதியில் நடைபெறும் முதலாவது பிரசாரக்கூட்டம் இம்மாதம் 26-ம் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில், வட பகுதியில் நடைபெறவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும், அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றியும் விளக்கிக்கூறப்படுமெனத் தெரியவருகிறது.

சுதந்திரக்கட்சி வடபகுதி உபதலைவர்களிலொருவரான திரு அல்பிரட் துரையப்பா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் வர்த்தக மந்திரி திரு. ரி பி. இலங்கரத்தின, தபால் அமைச்சர் திரு. செ குமாரசூரியர் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

தமிழ்க் காங்கிரஸ் எம் பி.க்கள் மூவரும், கம்யூனிஸ்ட். சமசமாஜக் கட்சி பிரமுகர்களும் இக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார்கள்.

# ஓய்வு பெறும் ஆசிரியர்கள்

### அதிபர் செ. ஸ்ரீநிவாசன்

சுழிபுரம், புதன்

திரு. செ. ஸ்ரீநிவாசன் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபராக சரியாகக் கால் நூற்றாண்டு காலம் சேவைபுரிந்து இவ்வருட இறுதியுடன் ஓய்வு பெறுகின்றார் ஆரம்பமுதல் இப்பாடசாலையிலேயே கடமையாற்றிவந்துள்ளார் தொடக்கத்தில் எட்டு ஆசிரியர்களுடன் இருந்த பாடசாலை 23 ஆசிரியர்கள் கற்பிக்கும்இடமாய் பலமண்டபங்கள் புதிது புதிதாகக் கட்டப்பட்டு மகாவித்தியாலயமாய் உயர்வதற்குக் காரணமானவர் இவர் இவரிடம் படித்து நல்லநிலைமையில் இன்றிருப்பவர் பலர் இவராலே உதவிபெற்று நல்வாழ்வு வாழ்பவரும் பலர் ஆசிரியர் நலம் பேணுவதிலும், கல்விச் சேவைபுரிவதிலும் பொது நலத் தொண்டுகள் பல செய்வதிலும் காலமெல்லாம் கழித்துவரும் அன்னாரின் சேவை நலம் பாராட்டுவிழாவெடுக்கப் பாடசாலையாசிரியர்களும் மாணவர்களும் முயற்சிமேற் கொண்டுள்ளனர்.

### இ. அப்பாத்துரை

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலிருந்து ஆசிரியர் இ. அப்பாத்துரையும் இவ்வாண்டுடன் ஓய்வுபெறுகிறார். இம்மகாவித்தியாலயத்திலேயே 37 வருடங்கள் இவர் சேவையாற்றியுள்ளார். இவர் பெரிதும் உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

0 0 0

### 'ஓய்வுபெறும் ஆசிரியர்க்கு புதிய கடமைகள்'

பருத்தித்துறை, புதன்

"ஓய்வுபெறும் ஆசிரியரின் அனுபவம், அறிவு ஆற்றல் ஆகியவற்றைச் சமுதாயம் பெற்று முன்னேற வேண்டுமானால் அவர்கள் தொழிற் சங்கங்களிலும் கல்வி சம்பந்தப்பட்ட ஆலோசனைச் சபைகளிலும் இடம்பெற வேண்டும். மேலும், சிக்கல்கள் வளர்ந்து செல்லும் கல்வித்துறையின் பலதரப்பட்ட பிரச்னைகளைத் தீர்க்க இவர்களின் அனுபவம் வழிகாட்டியாக இருக்கும்."

இவ்வாறு சுமார் 30 ஆண்டுகளின்பின் ஓய்வுபெறும் புலோலி இந்து ஆண்கள் பாடசாலை ஆசிரியர் திரு. ஈ. மகேசனின் பிரிவுபசார வைபவத்தில் பேசிய திரு. கே. எஸ், குலசிங்கம் கூறினார் திரு வீ, தம்பிப்பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## மிளகாயும் வெங்காயமும்

கோட்டை, புதன்

கொழும்பு துறைமுகத்தில் கடந்த வாரம் 2,668 தொன் பம்பாய் வெங்காயமும், 289 தொன் செத்தல் மிளகாயும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

## அகில இலங்கை நாடகப் போட்டி

சங்கானை, புதன்

அகில இலங்கை நாடகப் போட்டி ஒன்றை 1971-ம் ஆண்டு தைமாதம் 24-ம் 25-ம் திகதிகளில் நடாத்த சித்தன்கேணி நேருஜி கலாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது முதலாவது பரிசாக தங்கப்பதக்கமும் இரண்டாம் மூன்றும் பரிசாக வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப்படுவதுடன் சிறந்த நடிகநடிகை சிறந்த இயக்குநர் உட்பட ஒன்பது பரிசில்கள் வழங்கப்படும். இதற்கான ஏற்பாடுகளில் செயலாளர் திரு. முருகு நல்லசேகரம் ஈடுபட்டுள்ளார்.

## விதைகள்

கண்டி, புதன்

தற்போது தனியார் துறைக்குச் சொந்தமான இறக்குமதி செய்யப்படும் காய்கறிவிதைகளை அரசாங்கம் எடுத்து நடத்தும். இந் நடவடிக்கைகளை காணி அமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

இத்தகவலை ஹங்குரகெத்தா ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. பி. வி. உனந்தென்ன உடாஹெவஹெற்ற காரியாதிகாரி கந்தோரில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்கீழ் அரசாங்கம் பலவகையான காய்கறி விதைகளையும் குறைந்த விலைக்குவிற்பனை செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

## இடமாற்றம்

ஒட்டுசுட்டான், புதன்

ஒட்டுசுட்டான் கிராமச் சபையின் பிரதம லிகிதராக கடந்த மூன்று ஆண்டுகளாக கடமைபுரிந்த திரு. க. கதிர்காமத்தம்பி இம்மாதம் 31ம் திகதி முதல் தெல்லிப்பளை கிராமச்சபைக்கும் தெல்லிப்பளை கிராமச் சபையில் கடமைபுரிந்த திரு. க. இராஜநாயகம் ஒட்டுசுட்டான் கிராமச்சபைக்கும் இடமாற்றம்பெறுகின்றனர்

0 0 0

நெடுங்கேணி காரியாதிகாரி பிரிவில் சுகாதார பரிசோதகராக கடந்த நான்கு வருடங்களாக கடமைபுரிந்த திரு பி சதாசிவம் இம்மாதம் 31ம் திகதி முதல் அச்சுவேலிக்கும் ஹெக்கிராவை பகுதி சுகாதார பரிசோதகராக கடமைபுரிந்த திரு கே விநாசித்தம்பி நெடுங்கேணிக்கும் இடமாற்றம் பெறுகின்றனர்

## வரவுசெலவுத் திட்டம்

ஒட்டுசுட்டான், புதன்

ஒட்டுசுட்டான் கிராம சபையின் நடப்பு வருடத்தின் வரவுசெலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கி. ச தலைவர் திரு சி உ சிவராசா தலைமையில் 9 அங்கத்தவர்கள் உட்பட நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேறிய இவ்வரவு செலவுத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் 45 ஆயிரம் ரூபாவாகும்.

நத்தார் - புதுவருட
# மலிவு விற்பனை

நத்தார் பண்டிகை நெருங்கி விட்டது
உங்களுக்குத் தேவையான
நத்தார் ஜவுளிகளை
மலிவாகவும்
தரமானதாகவும்
வாங்குவதற்கு
இன்றே விஜயம்
செய்யுங்கள்
உங்கள் அபிமான
ஜவுளிமாளிகை



# டயரும்ஸ்

54—60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படத்துடன் பாப்பரசரின் இலங்கை விஜயம்
தமிழில் 40 நிமிடங்கள் வரை
காண்பிக்கப்படும்.

யாழ். வின்ஸர் திரையில் தினசரி 4 காட்சிகள்
ராஜன், லட்சுமி,
நிர்மலா, ரவிச்சந்திரன்
நடித்த
ஏன்?

யாழ். வின்ஸர், ரீகல்
தியேட்டர்களில்
பரிசுத்த பாப்பரசர்
6-வது சின்னப்பரின்
இலங்கை விஜயம்
30 நிமிடங்களுக்கு எல்லாக் காட்சிகளிலும்
காண்பிக்கப்படுகின்றது.

கெப்பிட்டல் பிளாஸா
திரைகளிலும்
யாழ். வெலிங்டன்
திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி
ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி
மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ




முத்துராமன், அசோகன், சோ,
ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்
கண்ணன் என் காதலன்
தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


...ன் (450 ரூபா) ஜே. எஸ். தில்லைநாதன் (500) வி. மயில்வாகனம் (30 ரூபா வீரசூரியா பரிசு).

**புதிய சட்டம்**

எஸ். மித்திர கிருஷ்ணன் (150 ரூபா).

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**24—12—70 வியாழன்**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 பக்திப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

844 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 பெண்ணுலகம், 7-00 கிறிஸ்தவநிகழ்ச்சி, 7-15 சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.


ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
சிவாஜி — கே. ஆர். விஜயா
நடித்த
தங்கை

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
பி. யு. சின்னப்பா-சரோஜினி
கிருஷ்ணன் - மதுரம்
நடித்த
ஆரியமாலா
(புதிய கொப்பி)

REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m.
Poya days 4 shows
Rod Spiger-Sidney Poitier
in
IN THE HEAT OF
THE NIGHT


## இன்றைய பலன்

மார்கழி மாதம் 9-ம் திகதி

[24-12-70]

மேஷம்- எண்ணியதில் தடைகள் தோன்றும். நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

ரிஷபம்- பிதாவழிமூலம் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறும். சிலர் வாழ்க்கையில் பொருள் வரவுக்கும் இடமுண்டு.

மிதுனம்- தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும்.

கடகம்- மதிப்பு உயரும். பொதுமக்கள் ஆதாவு பெருகும். புத்திரரால் புகழுமுண்டு. புதினமும் கேட்பீர்

சிம்மம்- மனதில் விரக்தி நிலைதென்படும். உடல்நலமும் பாதிக்கப்படலாம், கால்நடைகளினால் நஷ்டமேற்படும்.

கன்னி- பிரயாணத்தில் பொருள்நழுவக்கூடும். திருடர் பயத்திற்கும் இடமுண்டு விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

துலாம்- வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும். சிலர்புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும்

விருச்சிகம்- உஷ்ணத்தின் தாக்குதல் உடல்நலத்தை பாதிக்கும். நயனரோகத்திற்கு இடமளியாது நடந்து கொள்ளவும்.

தனுசு- உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும். உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள். சுகதாரம் வேண்டும்.

மகரம்- இதயத்தில் தென்றல் வீசும். பிறந்தகத்தின் தொடர்புள் வளரும் மனதில் கிளுகிளுப்பூட்டும் சம்பவங்கள் இடம்பெறும்

கும்பம்- சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும் செய்தொழிலால் நஷ்டமேற்படலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று.

மீனம்- பிரமச்சாரிகள் வாழ்க்கையில் மாரனின் கணை தாக்கும். காதல் உலகில் களிவான சம்பவங்கள் நடைபெறும்

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

அப்பாத்துரையும் இவ்வாண்டுடன் ஓய்வுபெறுகிறார். இம்மகாவித்தியாலயத்திலேயே 37 வருடங்கள் இவர் சேவையாற்றியுள்ளார்.

பண்ணாகம்ஐக்கிய நாணய சங்கத் தலைவராகவும் பணியாற்றி வருகின்ற இவர் கிராமத்தின் பல்வேறு பொது சேவைகளிலும் ஈடுபட்டு உழைத்துவருகின்றார்.

0 0 0

### சி. செல்லத்துரை

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை சிரேஷ்ட உதவி ஆசிரியர் திரு. சி. செல்லத்துரை இம்மாத இறுதியுடன் தமது சேவையிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

தொடர்ந்து 28 ஆண்டுகளுக்கு மேலாக இதே வித்தியாசாலையிலேயே கடமை புரிந்த இவர்தமது சேவைக்காலத்தில் பாடசாலை ஆசிரியர் சங்கச்செயலாளராகவும், உயர்வகுப்பு மாணவர் சங்கப் பொறுப்பாளராகவும், பாடசாலை விளையாட்டுப்பொறுப்பாளராகவும், பாடசாலை பரீட்சை பொறுப்பாளராகவும், பொருள்விநியோக சங்கப் பொறுப்பாளராகவும், சமய அபிவிருத்திச்சங்கப் பொறுப்பாளராகவும், வலி வடக்கு தமிழ் ஆசிரியர் சங்க பரீட்சைகளின் பிரதம மேற்பார்வையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

0 0 0

### மு. ஆறுமுகம்
### ஆ. மார்க்கண்டு

வீமன்காமம் ஆங்கில பாடசாலை ஆசிரியர்களான திரு மு ஆறுமுகம், திரு ஆ. மார்க்கண்டு ஆகிய இருவரும் இம்மாதத்துடன் ஓய்வுபெறுகிறார்கள்.

தமது சேவைக்காலத்தில் நல்லாசிரியர்களாகத் திகழ்ந்த இவர்கள் இப்பகுதிப்பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பாராட்டைப்பெற்றவர்கள்.

இவர்கள்ஓய்வு பெறுவதையொட்டிஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோரால் ஒரு பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

0 0 0

### எஸ். இராசலட்சுமி

மாவிட்டபுரம், புதன்

பளை வீமன்காமம் கிராம முன்னேற்றச்சங்கத்தின் நெசவுநிலைய ஆசிரியைசெல்வி எஸ். இராஜலட்சுமி தையிட்டி நெசவு நிலையத்துக்கு இம்மாதத்துடன் இடமாற்றம் செய்யப்படஇருக்கிறார். இந்நிலைய வளர்ச்சிக்காக

கொழும்பு துறைமுகத்தில் கடந்த வாரம் 2,668 தொன் பம்பாய் வெங்காயமும், 289 தொன் செத்தல் மிளகாயும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.


டயருமஸ்
54—60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

சக்தி வாய்ந்த
சர்வ பூச்சி நாசினி
பொலிடோல் ஈ·605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.
அழுக்கணவன், ஓட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்துவிடும்.
நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச்செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது— பொலிடோல்.
100 சீ. சீ. (4 அவுன்ஸ்) விலை— ரூ. 5/50
250 சீ. சீ. (9 அவுன்ஸ்) விலை— ரூ. 11/-
1000 சீ. சீ. (35 அவுன்ஸ்) விலை— ரூ. 37/-
பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும்.
இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.



மூலப் பொருட் சத்து
உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செனட்டர் கென்னடியின் பிரதிநிதிகளிடம்

# யு. எஸ். கைதிகள் பட்டியலை வடவியட்னும் கையளித்தது

## 30 கம்யூனிஸ்ட்களை விடுவிக்க தென்வியட்னும் அரசு முடிவு

நியூயோர்க், டிச. 23 வடவியட்நாமில் போர் கைதிகளாக இருக்கும் 370 அமெரிக்கரின் பெயர்ப்பட்டியல் ஒன்றை வடவியட்நாம் அரசாங்கம் செனட்டர் எட்வார்ட் கென்னடியின் பிரதிநிதிகளிடம் பாரிசில் வைத்து கையளித்துள்ளது.

தென்வியட்நாம் சிறையில் இருக்கும் 30 வடவியட்நாம் சிறைக்கைதிகளை விடுதலை செய்ய தென்வியட்னும் அரசு முன் வந்திருக்கின்றது.

வடவியட்நாம் அரசாங்கத்தினர் தங்கள் சிறையில் போர் கைதிகளாக இருக்கும் 370 அமெரிக்கரின் பெயர்ப்பட்டியல் ஒன்றை செனட்டர் எட்வர்ட் கென்னடியின் பிரதிநிதிகளிடம் பாரிசில் கையளித்தனர். இத்தகவலை திரு கென்னடி நியூயோர்க்கில் அறிவித்தார்.

இந்தப் பெயர்ப் பட்டியல் முழுதும் பூரணமானது என்று வடவியட்நாமியர் கூறியபோதிலும் அதை ஒப்புக்கொள்ள முடியாது வடவியட்நாமிலும் சிறையில் இருக்கும்போதே இறந்து போனவர்களில் 20 பேரின் பெயர்களும், முன்னமே விடுதலை செய்யப்பட்ட 9 பேரின் பெயர்களும் இப்பட்டியலில் இருக்கின்றன என்று செனட்டர் கென்னடி கூறியிருக்கிறார். ஜனதிபதி நிக்சன் அமெரிக்கப் போர்க் கைதிகளை விரைவில் விடுதலை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்

திரு. எட்வர்ட் கென்னடி தனிப்பட்ட முறையில் வடவியட்நாமில் இருக்கும் அமெரிக்கப் போர்கைதிகளை விடுதலை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதில் மிகவும் தீவிரமாக உழைத்து வருகிறார்.

இதே நேரத்தில், தென்வியட்நாமில் சிறையில் இருக்கும் 30 வடவியட்நாம் கைதிகளை ஹூனு வருடத்தை முன்னிட்டு விடுதலை செய்ய முடிவு செய்திருப்பதாக தென்வியட்நாம் பாதுகாப்பமைச்சர் தெரிவித்தார் முற்றிலும் மனிதாபிமானத்தின் அடிப்படையிலேயே இவர்கள் விடுதலைச்செய்யப்படுவதாகவும் கைதிகள் பரிவர்த்தனைகளாக இவர்கள் விடுதலை செய்யப்படவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### காணுமல்போன பத்திரிகையாளர்

கம்போடியாவில் காணுமல்போன 18 பத்திரிகையாளர்களை விடுதலை செய்யுமாறு தற்பொழுது ஆட்சியிலிருக்கும் லோங்நொலலையும், சீனுவில் இருக்கும் மன்னர் சிஹானுக்கையும், ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட பிரான்ஸ் பத்திரிகையாளர் சங்கம் கேட்டுள்ளது.

அமெரிக்கா கம்போடியாவிற்கு போர்க்கருவிகளுக்காக 25 கோடி டாலர் நிதியுதவி அளிப்பதை செனட் அங்கீகரித்துள்ளது. ஆனல் அமெரிக்கா எவ்வித துருப்புகளையும் அங்கு அனுப்பக்

## மைசூர் மாநிலத்தில் வன்முறைச் சம்பவங்கள்

புதுடில்லி, டிச. 23 மகாராஷ்டிர-மைசூர் எல்லை சம்பந்தமான மகாஜன கமிஷன் அறிக்கை ஆட்சிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டதைத் தொடர்ந்து மைசூர் மாநிலத்தில் வன்முறைச் செயல்கள் தலைதூக்கியிருப்பதாகவும், மாநிலத்தின் பல பகுதிகளிலும் வன்முறைச்செயல்கள் நடைபெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் தபால்நிலையங்கள், ரயில் நிலையங்களைத் தாக்கியுள்ளனர். கும்பல்கார் என்ற இடத்தில் ரயில்நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள பெற்ரோல் நிலையத்திற்குத் தீ வைத்துக் கொளுத்தினர். இதற்கு அண்மையிலுள்ள பாலம் ஒன்றை அவர்கள் வெடி வைத்துத் தகர்த்தனர். தந்திக்கம்பிகள் துண்டிக்கப்பட்டன. இவ்வன்முறைச் சம்பவங்களால் சினிமாத் தியேட்டர்கள், சந்தைகள், பாடசாலைகள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் யாவும் மூடப்பட்டன. இந்த வன்முறைச் சம்பவங்களைப் பொலிஸார் கட்டுப்படுத்த முயன்றபொழுது 10பொலிஸார் காயமடைந்தனர். 63 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

போலந்தில் அமைதி:

## புதிய தலைமையை மக்கள் ஏற்றுக்கொண்டனர்

வார்ஸோ, டிச. 23 போலந்தில் விலைவாசிகள் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து குழப்பங்கள் வெடித்ததால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த அவசர காலச்சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

பால்டிக் துறைமுகங்களில் அமுலில் இருந்த இரவு ஊரடங்குச்சட்டமும் வெகுவாகத் தளர்த்தப்பட்டுவிட்டது. மூன்று தினங்களுக்குள் நாடு மீண்டும் அமைதிக்கு திரும்பியுள்ளது.

புதிய தலைமையை மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

போலந்தில் கோமுல்கா ஆட்சி மாறி கிரெக் ஆட்சி ஏற்பட்டிருப்பதைப் பற்றி ஆராய [illegible] பார்லிமெண்ட் சபை கூட

### சுவிஸ் தூதரை மீட்க 51பேரை விடுவிக்க பிரேசில் இணக்கம்

பிரசிலியா(பிரேசில்) டிச 23 பிரேசில் தீவிரவாதிகளினுல் கடத்தப்பட்ட சுவிட்சர்லாந்து தூதுவர் திரு. பூக்கர் விடுதலைசெய்வதற்காக பிரேசில் சிறையில் இருக்கும் 70தீவிரவாதிகளில் 51பேரை விடுதலைசெய்வதற்கு பிரேசில் அரசாங்கம் உடன்பட்டிருக்கிறது.

சுவிட்சர்லாந்து தூதுவரை விடுதலை செய்வதானுல் சிறையிலிருக்கும் 70பேரையும் விடுதலைசெய்யவேண்டுமென முன்பு தூதுவரைக் கடத்திய தீவிரவாதிகள் நிபந்தனை விதித்திருந்தனர்.

ஐரோப்பாவில்

## விமானக் கட்டணம் அதிகரிக்கும்

ஜெனிவா, டிச 23 ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் நடைபெறும் விமான சேவைகளில் பிரயாணக்கட்டணங்கள் விரைவில் அதிகரிக்கப்படலாம் என்று தெரிகின்றது.

ஜெனிவாவில் நடைபெற்ற விமானப் போக்கு வரத்துச் சம்பந்தமான மாநாட்டில் பிரயாணக் கட்டணங்களை 5 சத வீதம் அதிகரிப்பதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இது இனி சம்பந்தப்பட்ட நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அமுலுக்குவரும்.

## பிராங்கோவுக்கு ஆதரவு

மாட்ரிட், டிச. 23 சர்வாதிகாரி ஜெனரல் பிராங்கோவின் ஆட்சியை ஆதரித்து நேற்று ஸ்பெயினில் ஆயிரக்கணக்கான

# லிபியாவில் அந்நிய வங்கிகள் தேசியமயம்

திரிப்போலி, டிச. 23 லிபியா நாட்டிலுள்ள வெளிநாட்டு வங்கிகள் எல்லாவற்றையும் முழுமையாக அரசாங்கம் தேசியமயமாக்கியுள்ளது லிபியாவின் புரட்சித் தலைமைக்கவுன்சில் இம்முடிவை எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வங்கிகளில் பங்குப் பணம் 5000 பவுணுகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது இந்த வங்கிகள் பெரும்பாலும் பிரிட்டன், அமெரிக்கா, இத்தாலி, லெபனுன் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களால் நடத்தப்பட்டு வந்தன.

இந்த வங்கிகள் முழுவதும் இப்பொழுது அரசாங்கத்தின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன.

## நாவலர் நினைவு முத்திரை: தபால் அமைச்சருக்கு பாராட்டு

உரும்பராய், புதன் ‘இப்பொழுதுள்ள அரசாங்கம், நாவலர் பெருமானுக்கும், கலாயோகி ஆனந்த குமாரசாமிக்கும் அவர்களது ஞாபகமாக தபால் தலைகளை வெளியிடுவதின் மூலம் ஈழத்தமிழர் வரலாற்றில் நல்லதொரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது குறித்த இரு பெரியார்களதும் ஞாபகமாக தபால் தலைகளை வெளியிட ஒழுங்கு செய்த அரசாங்கத்துக்கும் தபால் அமைச்சர் அவர்களுக்கும் எமது நன்றி உரியதாகுக,

தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் பண்டிதமணிநூல் வெளியீட்டுச்சபையின் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:- கல்விப் பணியாகிய காந்தசக்தி நல்லார்மனதிற்பாய்ந்த பெரும் புண்ணியத்தினலே, நாவலர் பெருமான் பிறந்த நல்லூர்ப் பதியில் அவருக்கு 1969ல்சிலையமைக்க நேர்ந்தது, நாவலர் பெருமானுக்குச் சிலை நிறுவிப்பெருவிழாக் கொண்டாடிய காலத்தில் நாவலர் ஞாபக தபால் தலை அரசாங்கத்தினுல் வெளியிடப்படும் என்று சைவதமிழ் ஸ்தாபனங்கள் எதிர்பார்த்தபடி அந்தக் குறையை இப்பொழுதுள்ள அரசாங்கம் நிவிர்த்தி செய்யமுன்வந்தமை மிகவும் பாராட்டக்கூடியதே, நாவலர், ஆனந்தக்குமாரசாமி போன்ற நல்லறிஞர்களது ஞாபக தபால் தலைகளை வெளியிட தபால் தந்தியமைச்சர் திரு.செ. குமாரசூரியர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நன்றி கூறவேண்டிய தலையாய கடமை தமிழ்ப் பேசும் மக்களுக்குண்டு.

## ‘நாவலர் என்றுல் ஆறுமுக நாவலரையே குறிக்கும்’

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாண மத்திய கல்லூரித் தமிழ் மன்றம் நாவலர் விழாவைக் கொண்டாடியது. தலைமைவகித்த ஆசிரியர் திரு. ஷண்முக குமரேசன் கூறியதாவது:

“ஆறுமுகநாவலர் மாணவராகவும், ஆசிரியராகவும் எமது கல்வி நிலையத்தில் பணியாற்றினுர். திருவாவடுதுறை ஆதீனம் அன்னருக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கியது. நாவலர் என்ற பட்டம் பலருக்கு இருப்பினும் முதலில் அது யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலரையே குறிக்குமென

அதிகாரிக்கும் வீரத்தோடு கடிதம் எழுதினுர். 7ம் நூற்றுண்டில் அப்பர்பெருமான் காட்டிய வீரம், பிற்காலத்தில் நாவலருக்கு உண்டானது, பிள்ளைகள் மொழி கற்று, ஒழுக்கத்தோடு வாழ்வதற்குச் சைவ பாலபாடங்கள் எழுதிய நாவலரை நாம் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துவோம்.

செல்வன் ஆனந்தபிரசாத் தேவாரம் ஓதினுர். செல்வன் வ. திருச்செல்வமும் பேசினுர். செல்வன் சவாசுதேவன் நன்றியுரை நிகழ்த்தினுர்.

### நெற்பயிர் நோய்தீர நேர்த்திக்கடன்

யாழ்ப்பாணம், வியா. நெற்பயிருக்கு ஏற்பட்ட காவோலைநோய், மருந்துகள் பல தெளித்தும் தீராமையினுல் கடவுள் அருளினுலேதான்தீரவேண்டுமென வயல்களில்நேர்த்திக்கடனுக்காக வரம்புகளில் மூளைக்கட்டைகள் நாட்டப்பட்டுள்ளன பரந்தன் பகுதியில் இவ்வாறு விவசாயிகள் செய்துள்ளனர். இப்பகுதியைச் சேர்ந்த பல பயிர்ச்செய்கைக்குழுக்கள் நெல்லின் நோய்தீர பிரார்த்தனைசெய்யுமாறு விவசாயிகளைக் கேட்டுள்ளன.

(கு. வி. ம.)

### கடையில் களவு

யாழ்ப்பாணம், வியா. சாவகச்சேரி வடக்கில் பிரதான வீதியில் உள்ள கடைஒன்றில் களவுபோய்விட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி விசாரணை செய்யச் சென்ற சாவகச்சேரிப் பொலிஸார் கடையிலிருந்த காசு மேசைலாச்சி ஒன்றை வீதியில் கண்டெடுத்தனர். கைஅடையாளங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், விரைவில் கள்வர் அகப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(கு. வி. ம)

“கல்விச்சீர்திருத்தம்

### ரஷ்யப்புரட்சி ஏற்படவேண்டும்”

-கா. பொ.

ஊர்காவற்றுறை, திங். கல்விநிலையங்கள் அறிவாலயங்களாகும். தேவலாயத்திலும் பார்க்க ஒருநாட்டில் கல்விநிலையங்களே சிர்பெற்றுவிளங்க வேண்டும். அரசாங்கத்தை எதற்கும் நம்பியிராமல் உடலுழைப்பு மூலம் கல்வி நிலையங்களை வளர்க்கவேண்டும். ரஷ்யா நாட்டில் கல்விச்சீர்திருத்தம் ஏற்பட்டதுபோல் நம்நாட்டிலும் சீர் திருத்தம் ஏற்படவேண்டும் கல்வியின் சிறந்த அடிப்படையை உணர்ந்து நாம் சீர் திருத்தங்களைக் கையாள வேண்டும் என்று தீவுப்பகுதி எம். பி. பண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று செனட்டர் கென்னடி கூறியிருக்கிருர். ஜனுதிபதி நிக்சன் அமெரிக்கப் போர்க் கைதிகளை விரைவில் விடுதலை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் கைதிகள் பரிவர்த்தனைக்கு வழி செய்யவேண்டும் என அவர் கூறினர்.

...விற்கு போர்க்கருவிகளுக்காக 25 கோடி டாலர் நிதியுதவி அளிப்பதை செனட் அங்கீகரித்துள்ளது. ஆனல் அமெரிக்கா எவ்வித துருப்புகளையும் அங்கு அனுப்பக்கூடாதெனக் கூறியுள்ளது இத்தீர்மானம் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு இனிச் செல்லும்.

...காலச்சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

பால்டிக் துறைமுகங்களில் அமுலில் இருந்த இரவு ஊரடங்குச்சட்டமும் வெகுவாகத் தளர்த்தப்பட்டுவிட்டது.

திரு. கிரெக்கின் புதிய அரசாங்கம் பதவிக்குவந்த... துள்ளதாம்.

போலந்தில் கோமுல்கா ஆட்சி மாறி கிரெக் ஆட்சி ஏற்பட்டிருப்பதைப் பற்றி ஆராய்வதற்காக இன்று பார்லிமெண்ட் சபை கூடவிருக்கின்றது.

## ஆதரவு

மாட்ரிட், டிச. 23

சர்வாதிகாரி ஜெனரல் பிராங்கோவின் ஆட்சியை ஆதரித்து நேற்று ஸ்பெயினில் ஆயிரக்கணக்கானவர்கள் ஊர்வலம் சென்றனர்கள்.

பிராங்கோ அரசுக்கு எதிரான பாஸ்க்தேசியவாதிகளுக்கு வெளிநாடுகள் சில ஆதரவளிப்பது குறித்து இவர்கள் கண்டனம் தெரிவித்தார்கள்.

...ருக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கியது. நாவலர் என்ற பட்டம் பலருக்கு இருப்பினும் முதலில் அது யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலரையே குறிக்குமென திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் குறிப்பிடுகிருர். திருவண்ணுமலை ஆதீனம் நாவலருக்குப் பட்டணப் பிரவேசம் அளித்தது''

பண்டிதை (செல்வி) தங்கம்மா அப்பாக்குட்டி தமது உரையில் கூறியதாவது:

''ஆறுமுகநாவலர் ஆற்றிய தொண்டை எமது நாடு மறக்கமுடியாது. வீரம் நம்பிக்கை, அஞ்சாமை ஆகிய பண்புகள் அவரிடத்தே மலிந்துகிடந்தன. காற்புள்ளி, அரைப்புள்ளி ஆகிய தரிப்புக் குறிகளைத் தமிழில் புகுத்திய நாவலர் பெருமான், சைவத்துக்கும் தமிழுக்கும் அரிய தொண்டாற்றினர் போலிக் கிறிஸ்தவர்களையும், போலிச் சைவர்களையும் கண்டித்த இத்தொண்டர், மாவட்ட...

...தேவாரம் ஓதினர். செல்வன் வ. திருச்செல்வமும் பேசினர். செல்வன் ச. வாசுதேவன் நன்றியுரை நிகழ்த்தினர்.

...ஏற்பட்டதுபோல் நம்நாட்டிலும் சீர் திருத்தம் ஏற்படவேண்டும் கல்வியின் சிறந்த அடிப்படையை உணர்ந்து நாம் சீர்திருத்தங்களைக் கையாள வேண்டும் என்று தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் இரத்தினம் நேற்று நடைபெற்ற சரவணை நாகேசுவரி வித்தியாசாலைப் பெற்றார்தினவிழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

படித்த இளைஞர்களுக்கு

# முத்தையன்கட்டு உபஉணவு குடியேற்றத் திட்டம்

யாழ்ப்பாணம், வியா

வவனியா மாவட்டத்தில் முத்தையன்கட்டு உபஉணவுக் குடியேற்றத்திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்களுக்குக் காணி வழங்குவதற்கு விண்ணப்பங்கள் ஏற்கும் முடிவுதிகதி இம்மாதம் 24 ஆகும் வவனியா அரசாங்க அதிபராலும் யாழ். அரசாங்க அதிபராலும் இவ்விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

வவனியா மாவட்டத்தில் வவுனியா வடக்குக் காரியாதிகாரி பிரிவிலுள்ள கற்சிலைமடுக் கிராமசேவையாளர் பகுதியில் முத்தையன்கட்டு குடியேற்றத் திட்டத்தின்கீழ் ஏறக்குறைய 200 காணித்துண்டுகள் வழங்க வவுனியா மாவட்டத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் வசிப்பவர்களிடமிருந்து அரசாங்க அதிபர்களால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இக்காணிக்கச்சேரி ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு அலுவலகத்தில் வவுனியா மாவட்ட விண்ணப்பகாரர்களுக்கு அடுத்த மாதம் 6-ம் திகதி காலை 10 மணிக்கும் யாழ்ப்பாண மாவட்ட விண்ணப்பதாரர்களுக்கு அடுத்த மாதம் 7-ம் திகதி காலை 10 மணிக்கும் நடைபெறும்.

காணிக்கச்சேரியில் தெரிவு செய்யப்பட்டோருக்கு அரசாங்கத்தால் கீழ்காணும் உதவி செய்யப்படுமென்று அறியக்கிடக்கிறது.

ஆயுதம் வாங்க 30 ரூபாயும் விதைதானியம் வாங்க 50 ரூபாய்க்கு மேற்படாமலும் அரசாங்கத்தால் தற்காலிக கொட்டில் அமைக்க 80 ரூபாயும் மாதிரி வீடு கட்ட 1000 ரூபாயும் மலசலகூடம் அமைக்க 75 ரூபாயும் அளிக்கப்படும்.

மாதத்திற்கு 30 ரூபாய் வீதம் மாகாந்த உதவிப் பணம் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும். தெரிவு செய்யப்படும் வாலிபர்கள் அடுத்தாண்டு பெப்ரவரி 1-ம் திகதி குடியேற வேண்டும் தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொருவரும் ஏக்கருக்கு வருடாந்தக் குத்தகையாக 20 ரூபாய்வீதமும் தண்ணீர் வரியாக 25 ரூபாய் வீதமும் கட்ட வேண்டும்

தெரிவு செய்யப்பட்டவர்கள் கூட்டுறவுச்சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்தல் வேண்டும். முத்தையன் கட்டு திட்டம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க மூலமே இணைந்தவர்களது மேற்படி காணித்திட்ட உற்பத்திப் பொருள்களை விற்கப்பட வேண்டும்.

மாதிரி விண்ணப்பப் பத்திரங்கள்மூலம் விண்ணப்பம் செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (கு வி ம)

......

## '10-ம் வகுப்பு வரை கற்பிக்க அனுமதி'

உரும்பராய், புதன்

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை பெற்றார் ஆசிரியர் சங்கத்தினதும் வலிகிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தினதும் வேண்டுகோளின்படி ஒன்று தொடங்கி பத்தாம் வகுப்புவரை இப் பாடசாலையில் கல்விபோதிக்க வித்தியா பகுதி அனுமதியளித்துள்ளது.

கோப்பாய் வட்டாரத்தில் ஒன்று தொடங்கி பத்தாம் வகுப்புவரை இயங்குவதற்கு வித்தியாபகுதியால் அனுமதிக்கப்பட்ட ஏழு பாடசாலைகள் விபரம் பின்வருமாறு.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை, ஆவரங்கால் எம். எம். பாடசாலை, புத்திகலட்டி ஸ்ரீ விஷ்ணுவித்தியாலயம், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி புனித தெரேசா பாடசாலை, உரும்பராய் ரோ க பாடசாலை, உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை.

# புதிய வசதிகளுடன் அப்பலோ-14 புறப்படும்

வாஷிங்டன், டிச. 23

சந்திரனுக்கு செலுத்தப்படவிருக்கும் அப்பலோ-14 கலத்துக்கு கிட்டிஹாக் என்று பெயரிடப்பட்டுள்ளது ரைட் சகோதரர்கள் முதன்முதலில் ஆகாய விமானத்தை செலுத்திய வட கரோலினவிலுள்ள ஊரின் பெயர் இது.

விண்வெளிவீரர்கள், அலன்ஷெப்பார்ட், எட்மிச்சல்ஸ்டுவர்ட்ரூஸா ஆகியவர்கள் இதில் பிரயாணம் செய்வார்கள் இது சரியாக இயங்குமானல் பெப்ரவரி 5ம் திகதி அலன்ஷெப்பர்ட்டும் மிச்சலும் கிட்டிஹாக் கிலிருந்து பிரிந்து அண்டயார்ஸ் என்ற நிலாவாகனத்தில் சந்திரத்தரையில் இறங்குவார்கள்

சந்திரனின் மேற்பரப்பில் பலமூரா என்ற பகுதியில் இந்த இருவரும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கும்வேளையில் ஸ்டுவர்ட்ரூஸா தாய்க்கலத்தில் சந்திரனைச் சுற்றி வந்து கொண்டிருப்பார்

அப்பலோ-13 தோல்வியடைந்ததின் காரணமாக அப்பலோ-14 கலத்தில் மேலதிகமான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதில்மேலதிக ஒரு பிராணவாயுத் தாங்கியும் பாட்டரிசெட்டுகளும் பொருத்தப்பட்டுள்ளன. மின்சார வசதிகள் புதுமாதிரியில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன குடிதண்ணீர் வசதியும் மேலதிகமாகப் பொருத்தப்பட்டுள்ளது.

— —

## யாழ். கச்சேரியில் 52 ஊழியர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். அரசாங்க செயலகத்திலிருந்து இவ்வாண்டு இறுதியில் 52 ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளார்கள்.

மாற்றங்கள் எதிர்பாராத விதத்தில் நடைபெற்றிருக்கின்றனவென்றும் இதனல் எதிர்காலத்தில் தங்கள் பிள்ளைகளைப் புதுப் பாடசாலைகளில் சேர்ப்பதில் சிரமம் ஏற்படுமென்றும் ஊழியர்கள் கவலைதெரிவித்தனர். (கு. வி. ம.)

## விவசாயிகள் விபரங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

சகலதுறைத்திலும்விவசாயம் செய்பவர்களினதும் விபரங்களை திரட்டுவதற்கான படிவங்களை விவசாய இலாகா விவசாயிகளுக்கு அனுப்பியுள்ளது.

கால்நடைகள் விபரம், விவசாயம் செய்யும் நிலத்தின் விஸ்தீரணம் விவசாய உபகரணங்கள், நெற்சங்கத்துக்கு ஒப்படைக்கும் நெல்லின் தொகை ஆதிய விபரங்கள் படிவத்தில் கேட்கப்பட்டுள்ளன.

இவ்விபரங்களை விவசாயிகள் பலர் குறிப்பிடுவதற்கு தயங்குகின்றனர்கள். இது பற்றி அவர்களிடம் விசாரித்தபோது தனிப்பட்டவர்களிடம் கடன்வகையில் எதிர்காலத்தில் உதவி பெற முடியாதநிலை ஏற்படலாமென்றும், நெல்லை இடமாற்றிச் செல்லுவதற்கு தடைகள் ஏற்படலாமென்றும் தெரிவித்தனர். (கு. வி. ம.)

— —

## தீவுப்பகுதி அம்புலன்ஸ் படகு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

தீவுப்பகுதி நோயாளரின் சேவையில் ஈடுபட்டுள்ள அம்புலன்ஸ் படகு திருத்தம்செய்வதற்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது

இந்தப்படகை திருத்தம் செய்து உடன்அனுப்புமாறு நாரந்தனைக் கிராமசபைப் பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளை தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியரைப் பேட்டி கண்டு பேசியதால் அமைச்சர் இவ்விடயத்தை சுகாதார அமைச்சரின் கவனத்திற்குகொண்டு வந்துள்ளதால் அது உடன் திருத்தியனுப்பப்படும் எனச் சம்பந்தப்பட்ட அமைச்சர் உறுதிகூறியுள்ளார் எனவும் அறியப்படுகிறது.

## டாக்டர் கலீல் வேண்டுகோள்

கோட்டை, புதன்

''ஆழ்ந்த சமயப்பற்றுள்ள முஸ்லிம்கள் தாம் வாழ்நாள் முழுவதும்பிரயாசைப்பட்டுச் சேர்த்த பணத்தைக் கொண்டு ஏனைய வசதிபடைத்தோர்களுடன் இணைந்து புனித ஹஜ் யாத்திரையை நிறைவேற்றுவது முற்றிலும் கடமையாக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கம் எமது நாட்டின் நீண்ட கால வரலாற்றில் முதல்முதலாக முஸ்லிம்களின் மீதான கட்டாயமதக் கடமையை நிறைவேற்ற இடமளிக்க மறுப்பது அவர்களின் மதஉணர்ச்சியை புண்படுத்துவதாக இருக்கும் பொது மக்களின் பிரதிநிதிகள் என்றவகையில் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் பிரதமமந்திரியுடனும் நிதிமந்திரியுடனும்பேசி இப்பிரச்னையை மறுபரிசிலனை செய்யநடவடிக்கை எடுக்கவேண்டும்.''

இவ்வாறு அகிலஇலங்கை முஸ்லீம் லீக் தலைவர் டாக்டர் எம். ஸி. எம். கலீல் சகல எம். பி, க்களுக்கும் அனுப்பிவைத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்

வழமைபோலஇப்போதும் முஸ்லீம் சமூகத்தினர்தமது மதத்தை உரியமுறையில் அனுஷ்டிக்க வழிவகுக்குமாறு டாக்டர் கலீல் தமது வேண்டுகோளில் வற்புறுத்தியுள்ளார் (நல். நி.)

## மாதகலில் உதவி அமைச்சர்

சுழிபுரம், புதன்

மாதகல் துறைமுகப் பகுதியைகப்பல்போக்கு வரத்து உல்லாசப் பிரயாணத்துறை உதவி அமைச்சர் திரு டி. பி. விக்கிரமசிங்கா எம். பி. நேரில்வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார். அமைச்சர் கோஷ்டியினர்மாதகல் வந்தபோது வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டனர். அமைச்சருடன் திரு வி. பொன்னம்பலமும் வந்திருந்தார்.

## மாதகல் மக்களுக்கு எஸ்.ஜே.வி உறுதி

சுழிபுரம், புதன்

மாதகல் கடற்கரையோரமாகவுள்ள மீனவர்களுக்கு குடியிருக்க வீடுகட்டும் ஒரு திட்டத்தைவிரைவாக நிறைவேற்றித் தருவதாக மின்சார விஸ்தரிப்புத் திட்டம் போன்றவற்றை துரிதப்படுத்தல் போன்ற வேலையை உடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் திரு. எஸ், ஜே. வி. தெரிவித்தார்.

. மாதகல் துறைமுக அபிவிருத்தி, கலங்கரைவிளக்கம் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என எஸ் ஜே. விக்கு அவ்வூர் மக்கள் எடுத்துச் சொன்னர்கள்.

— —

## வீதியை திருத்த வேண்டுகோள்

சுழிபுரம், புதன்

''சுழிபுரம் காளுவன் சந்தியில் மூளாய் புறம் செல்லும் வீதியை மழை வெள்ளம் ஓடும் வேளையில் வெட்டி போக்குவரத்தை துண்டிக்காத வாறு நிரந்தர திட்டத்தின் கீழ் செப்பனிடவேண்டும்'' என தொல்புரம் மக்கள் அரசாங்க அதிபரையும் பகிரங்க வேலைப் பகுதியினரையும் வேண்டியுள்ளனர் இவ்விஷயம் சம்பந்தமான ஒரு விரிவான மகஜரையும் அனுப்பியுள்ளனர்.

## அதிபர்களுக்குப் பதில் சிரேஷ்ட ஆசிரியர்கள்

பருத்தித்துறை, புதன்

இவ்வாண்டு இறுதியுடன் இளைப்பாறும் அதிபர்கள், தலைமையாசிரியர்கள் ஆகியோருக்குப் பதிலாக, அவ்வப்பாடசாலை அதிசிரேஷ்ட ஆசிரியரே கடமையாற்றுவரெனத் தெரிகிறது. இளைப்பாறும் உதவி ஆசிரியரின் பதவிகளும் உடனடியாக நிரப்பப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே அநேகமான பாடசாலைகள் நிரந்தர நேர சூசிகையின்றி இயங்கவேண்டிய நிலைமை உருவாகலாமெனத் தெரிகிறது.

## உணவுப் பொருள் விநியோகம்

ஒட்டுசுட்டான், புதன்

முத்தையன்கட்டு வலது கரை குடியேற்றவாசிகளுக்கு இம்மாதம் 21ம் திகதி அரசாங்கம். மாவு சீனி ரின்மீன், ரின் இறைச்சி போன்ற உணவுப் பொருள்களை இலவசமாக திட்ட அலுவலகத்தில் வைத்து வழங்கியது.

## திருமுறைக்கழகப் போட்டி முடிவு

சித்தன் கேணி, புதன்

வட்டு. கிழக்கு சித்தன் கேணி திருமுறைக் கழகம் திருவெம்பாவை போட்டி நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

திருமுறைப் பேச்சுப் போட்டி: மேற்பிரிவு- செல்வி செ செல்வமலர், கு விஜயதேவி, கு அருந்தவச்செல்வி மத்திய பிரிவு- நி நித்தியகல்யாணி, செ சந்திரவதனு, சு சாவேஸ்வரி. கீழ்ப்பிரிவு- செ நந்தினி, க சுலோசனு, கா யசோதரா

பண்ணிசைப் போட்டி- மேற்பிரிவு- செல்விகள் க பூமகள், செ செல்வமலர். கு அருந்தவச்செல்வி. மத்தியபிரிவு- நி நித்தியகல்யாணி, க கௌரி, இ மல்லிகாராணி. கீழ்ப்பிரிவு- செ நந்தினி, கா யசோதரா, க சுலோசனு.

திருமுறை விழாக் கொண்டாடுவதென்றும் கழகம் தீர்மானித்துள்ளது.

வேலையற்ற தமிழ்ப் பட்டதாரிகள்

# தேசிய ரீதியில் இயங்க தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

புதிதாக ஆள் சேர்க்கும் சகல அரசாங்க வேலைகளுக்கும் வயதுக்கட்டுப்பாட்டை தளர்த்தியுமைக்காக பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகாவிற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், யாழ்ப்பாணத்தில் நடந்த வடபிரதேச வேலையற்றபட்டதாரிகள் சங்கக்கமிட்டிக்கூட்டத்தில் நிறைவேறியது.

திரு. க. சதானந்தன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், சங்கக்கோரிக்கைகளையும், சிபார்சுகளையும் ஏற்று தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியமைக்காக பிரதம மந்திரிக்கு நன்றி தெரிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூடத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள்: ஆசிரியர்பதவி கிடைத்த பட்டதாரிகளுக்கு இம்மாதம் [illegible]-ம் தேதி தேநீர்விருந்து அளிப்பது.

தபால் அமைச்சர் குமாரசூரியரை இம்மாதம் 27-ம் தேதி யாழ்ப்பாணத்தில் பேட்டிகாண்பது.

இலங்கையிலுள்ள ஏனைய சிங்களப் பட்டதாரிகளுடன் இணைந்து தேசிய ரீதியில் தமிழ்ப் பட்டதாரிகள் இயங்கவேண்டும்,

உயர்கல்வி பெறும் நோக்கத்தோடு வங்கியில் கடன் எடுத்தவர்களுக்கு உத்தியோகம் கிடைக்குமட்டும், கடனைத் திருப்பிக்கொடுக்க அவகாசம் கோருவது.

வேலையற்ற பிரச்னைபற்றி பல அறிஞர்களைக்கொண்ட கருத்தரங்கொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

'அவன் என்னைத் திட்டினன்; அவன் என்னை அடித்தான்; அவன் என் பொருளைப் பறித்துக் கொண்டான்' என்று தன் மனத்தில் முடிமேல் முடி போட்டுக்கொண்டே இருப்பவனது பகை ஒருநாளும் அடங்காது. — புத்தர்


# ஈழநாடு

Eelanadu ... Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 889

ஸௌம்ய வருஷம் சாதாரண வருஷம் மார்கழி மாதம் 9-ந் திகதி (24 - 12 - 70)


## தொழிலாளர் கடமை

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு ஆலோசனைக் குழுக்களை (மதியுரைக் குழுக்கள்)ச் சேர்ந்த உறுப்பினர்கள் மத்தியில் பிரதமர் நிதிஅமைச்சர், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ஆகியோர் நிகழ்த்திய உரைகளில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இந்த நாட்டின் தொழிலாளர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கு உதவ வேண்டும்

இன்றைய கூட்டணி அரசாங்கம் ஆட்சிக்குவந்ததும் தொழிலாளர் அரசாங்கம் ஆட்சிக்கு வந்துவிட்டதென்று அகமகிழ்ந்த இந்நாட்டுத் தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்த பலர் உற்சாக மிகுதியாலோ என்னவோ தங்கள் கடமையைச் சிறிது மறந்து உரிமையை மட்டும் கருத்தில்கொண்டு செயலாற்றத் தொடங்கினர். இதனால்தான் சில வாரங்களுக்கு முன் ஒரு வைபவத்தில் பேசிய பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா, எட்டு மணி நேர வேலையில் ஆறு மணி நேரத்தை வீண்பொழுது போக்கிவிட்டு இரண்டுமணிநேரம் மட்டும் வேலை செய்வதுதான் தங்கள் கடமையும் உரிமையும் எனச் சில தொழிலாளர் கருதிக் கொள்கிறார்களென்று மனம் நொந்து கூறியதுடன் இந்த அரசாங்கம் தனது சோஷலிசக் கொள்கைகளையும் திட்டங்களையும் சரிவர நிறைவேற்றவேண்டுமானுல் தொழிலாள வர்க்கம் கட்டுப்பாடு, கடும் உழைப்பு என்பவற்றைத் தனது இலட்சியமாகக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

உரிமையைக் கோருவதும் உரிமைக்காகப் போராடுவதும் தவறல்ல; இதை யாரும் தவறென்று சொல்லவும் துணியமாட்டார்கள்.

ஒரு சங்கம் அமைக்க முயற்சி செய்ய வேண்டுமென்றும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின தமது அமைச்சின் கீழுள்ள பல்வேறு ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையில் வலியுறுத்தியிருக்கிறார். போட்டித் தொழிற்சங்கங்களினால் தொழிலாளர்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் இப்பத்தியில் பல தடவைகளிலும் எடுத்துக் காட்டியிருப்பதுடன் ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்பதைச் சட்டபூர்வமாகக் கொண்டுவரவேண்டியதன் அவசியத்தையும் ஒருசில தொழிலாளர் சேர்ந்து ஒரு சங்கம் அமைக்கவும் ஒரு தொழிலில் பல தொழிற்சங்கங்களை அமைக்கவும் இப்போது வசதியளிக்கும் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்றும் வலியுறுத்திவந்திருக்கிறோம் போட்டித் தொழிற்சங்கங்களினால் தொழிலாளருக்கும், அரசாங்கத்துக்கும், நாட்டுக்கும் ஏற்படும் தீமைகளை கருத்தில்கொண்டு ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்கவேண்டுமென்பதைச் சட்டபூர்வமாகக் கொண்டு வருவதற்கு இன்றைய அரசாங்கத்தைத் தவிர வேறு எந்த அரசாங்கத்துக்கும் வாய்ப்பிருக்குமென்று எதிர்பார்க்க முடியாது,

தொழிலாளர் தமது சக்தியை உணர்ந்துகொள்ளவும் தொழிலாளரின் சக்தி அவர்களுக்கும் நாட்டுக்கும் பயன்படவும் ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற அமைப்பு இன்றியமையாதது.

அரசியல்கட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் தொழிற்சங்கங்கள் இருப்பதால்தான், கட்சி அரசியல் நோக்கத்துடன் போட்டித் தொழிற்சங்கங்கள்

# நாளை நத்தார் தினம்

# இந்த கிறிஸ்து யார்

## பண்டிதர் ஆசிநாதர்

கிறிஸ்துவத் திருமறைக்கும் ஏனைய மதங்களுக்கும் உள்ள வேறுபாடு-மாறுபாடு என்ன?

ஏனைய மதங்களுக்கு இல்லாத சிறப்பு கிறிஸ்துவ மதத்தில் உண்டா?

மற்றைய மதங்களிலே மனிதன் கடவுளைத் தேடி நாடிச் செல்கிறுன், கிறிஸ்துவ மதத்திலே இறைவன் மனிதனைத் தேடிவருகிறுன். கிறிஸ்துவ மதக் கொள்கையின் கருவூலம் இதுதான்! இறைவன் மனிதனை உலகிற் படைத்துப் பலுகச்செய்து, அவனை வழிப்படுத்தி மீட்பதற்காக, தாமே மனிதனுனார். இந்த அடிப்படைத் தத்துவத்திலிருந்தே கிறிஸ்துவ மறையின் கோட்பாடுகளும், சித்தாந்தங்களும் போதனைகளும், கொள்கை விளக்கங்களும் விரிவுபெற்றன.

கிறிஸ்து பிறந்தது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான். கிறிஸ்துவ மதம் உதித்தது உலகம் படைக்கப்பட்ட, உலகில் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட ஆதி யுகத்தில்.

கிறிஸ்துவ மதம் மிகமிகப் பழமையானது. கிறிஸ்துவ மறை இறைவனால் ஆக்கப்பட்ட வேதம்.

இறைவன் ஆதாம் என்னும் முதல் மனிதனைப் படைத்தார். அவனுக்குத் துணைவியாக ஏவாளைப் படைத்தார். இன்று உலகில் வாழும் அத்தனைகோடி இன-நிற மக்களும் இந்த ஆதி மனிதரின் சந்ததியினரே.

இறைவன் ஆதிமனிதரைப் படைத்து அற்புதமான நிலையில் வாழவைத்தார். ஆதி மனிதரோ இறைவனின் ஆணையை மறுத்து அவல நிலையுற்றனர். அப்போதே இறைவன் ஆதிமனிதனுக்கு உலக மீட்பர் ஒருவரை அனுப்புவதாக வாக்களித்திருந்தார். இறைவன் வாக்களித்த மீட்பர் (மெசியா) கிறிஸ்துநாதர்தான். எனவே கிறிஸ்துவ மதம் இறைவனின் படைப்புக்காலப் பழமையுடையது.

### இறைவன் ஏன் மனிதனுனார்?

ஒருவனை அவருடைய இன்னலிலிருந்து விடுவிக்கவோ இரட்சிக்கவோ விரும்பினுல் அவனுடைய இன்னலிலே-பிரச்சினையிலே பங்குகொண்டு ஒன்றுகி அவனுக்கு விடுதலை கொண்டுவரலாம்.

கடவுள் மனிதனுகித்தான் மனிதனை இரட்சிக்கலாம். எனவே கடவுள் மனிதனுனார். மனிதனுன இறைவனே கிறிஸ்துநாதர்.

இறைவனுன மனிதன் கிறிஸ்து என்றும் யேசு என்றும் இம்மானுவேல் என்றும் அறியப்படுகின்றுர். இப்பிறமொழிச்சொற்களின் பொருள்களை - கருத்துக்களை எல்லோரும் அறிந்திருத்தல் வேண்டும்.

கிறிஸ்து என்ற சொல் கிறிஸ்தோஸ் என்ற சொல்லின் தமிழ் வடிவாகும். கிறிஸ்தோஸ் என்பதன் பொருள் தைலம் பூசப்பட்டவர் (அபிஷேகம் செய்யப்பெற்றவர்) என்பதாகும். எனவே கிறிஸ்து என்று சொல்லும்போது இறைவனால் முத்திரிக்கப்பட்டு-அபிஷேகம்செய்யப்பட்டு-அனுப்பப்பட்டவர் என்றே கருத்துக்கொள்ள வேண்டும். மெசியா என்ற எபிரேயச் சொல்லுக்கும் கிறிஸ்து என்பதன் பொருளே அமையும்.

யேசு: கிறிஸ்துவுக்கு பிறந்த எட்டாம் நாள் இடப்பட்ட பெயர். ஜெசுவா என்ற எபிரேயச் சொல்லின் தமிழ் வடிவம் இதற்கு இரட்சகர்-மீட்பர்-விடுவிப்பவர் என்று கருத்தாகும்.

இம்மானுவேல்' இந்த எபிரேயச் சொல்லின் பொருள் இறைவன் எம்மோடு இருக்கிறுர் என்பதாகும்

கிறிஸ்து, இயேசு, இம்மானுவேல் என்ற சொற்கள், இறைவன் எம்மோடு இருந்துகொண்டு எம்மை இரட்சிக்கிறவர் என்று பொருள்படும். இச்சொற்களே கிறிஸ்து ஏன் உலகுக்கு வந்தார் என்பதை நன்கு விளக்குகின்றன.

மனிதனின் பவ இருளை அகற்றி, அவனேடு வாழ்ந்து, அவனை இரட்சிக்க வந்த அன்புக் கடவுளே கிறிஸ்து.

மனிதனுடைய நன்மையையும் மீட்பையும் கருதியே யேசு மனுவுருவெடுத்தார். கிறிஸ்து மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கம் அவருடைய அணைகடந்த அன்புப் பெருக்கேயாகும்.

'அவர் என்னை நேசித்தார்' 'தம்மையே எனக்குக் கையளித்தார்' 'நான் அவரை நேசிக்க முன்பே அவர் நேசித்தார்' என்ற விவிலியத் திருநூல் வாக்கியங்கள் கிறிஸ்துவின் அன்பை அப்பட்டமாய் விளக்குகின்றன.

கிறிஸ்து, பிலாத்து எனும் இராயனுக்கு முன் நின்று கொண்டு தான் உலகில் ஏன் பிறந்தார் என்றும், ஏன் உலகில் உதித்தார் என்றும் விளக்கம் கொடுக்கிறுர்.

நான் சத்தியத்துக்குச் சாட்சி சொல்லப் பிறந்தேன். அதற்காகவே உலகிற்கு வந்தேன். சத்தியத்தைச் சார்ந்த எவனும் எனது குரலொலிக்குச் செவிகொடுப்பான்.

அன்று பெத்லேகமிலே மனிதனுய்ப் பிறந்து வாழ்ந்து, புதுமை புரிந்து இரட்சித்த அதே கிறீஸ்து இப்பொழுது எம் மத்தியில் இருக்கிறுர். "உலகம் முடியும் வரை உங்களோடு எந்நாளும் இருக்கிறேன்" என்று அவரே கூறினுர்.

ஏனைய மததலைவர்களுக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள மாபெரும்வேறுபாடு. அவர்கள் வாழ்ந்து, மறைந்தார்கள். ஆனுல் கிறிஸ்துவோ, மறைந்துவாழ்கிறுர். நானே உலகின் வழியும் வாழ்வும் ஒளியும் உலக மீட்பராய்-மக்களின் வழியாய் - வாழ்வாய் - ஒளியாயுள்ளவரே கிறிஸ்து பெருமான்.

யேசுநாயகனை - கிறிஸ்து பெருமானை எத்தனையோ கோணத்தில் பார்த்தபோதிலும் அவரை இறைவன் எனக் காணுதவரை நாம் அவரை முற்றிலும் அறிந்தவர் ஆகோம்.

கிறீஸ்துவை அறிய அறிய கிறீஸ்துவ மதத்தையும், கிறீஸ்துவ சித்தாந்தத்தையும், கிறீஸ்துவக் கோட்பாடுகளையும், கிறிஸ்துவ வணக்க வழிபாடுகளையும் விளக்கமாக அறிந்தவர்கள் ஆவோம்

திரு. வி. கலியாண சுந்தரனுர் இயற்றிய 'கிறிஸ்துவின் அருள் வேட்டல்' என்ற நூலிலிருந்து பின் வரும் பாடல்கள் எடுக்கப்பட்டன. அவருடன் சேர்ந்து நாமும் கிறிஸ்துவைத் துதிப்போம்.

## கிட்டிய பாவம் பின்போக துதிப்போமே!

அகிலொளி ஐயாவே அகிலமெல்லாம் உன்கருவில்
உலகிடை நீ ஒருகன்னி உயர்கருவில் உதித்தென்ன?

எவ்வுயுர்க்குந் தாயான இறையவனே இவ்வுலகில்
செவ்வியலி ஒரு தாயின் செழுங்கையில் வளர்ந்ததென்ன?

வன்பேய் முனைப் பழித்த வள்ளல் கிறீஸ்துவே
உன்சேயாய் வாழ்வேன் உணர்ந்து

யேசு கிறிஸ்து பெருமானே
எந்த உயிர்க்கும் அருள்வேனே
கிறீஸ்து கிறீஸ்து என்போமே
கிட்டிய பாவம் பின்போமே.

தீராப் பிணிகளைத் தீர்த்தோனே
தெவ்வரை அன்பாய்ப் பார்த்தோனே
அன்பை அளிக்க வந்தோனே
ஆருயிர் உலகுயத் தந்தோனே.

தெய்வக் குமர குருபரனே
சிவரைத் தாங்கும் செங்கரனே
யேசுவே என்றதும் நெஞ்சுருகும்
எல்லாப் பாவமும் இரிந்தருகும்.

(கொடுத்துதவியவர் — பண்டிதர் ஆசிநாதர்)

### இன்று

## தமிழ்நாடு இசை விழாவில் இலங்கைப் பெண் நடனம்

சென்னை, டிச. 23

தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் இசைவிழா நிகழ்ச்சிகளில் இன்று (வியாழன்) இலங்கையைச் சேர்ந்த குமாரிகீதாஞ்சலியின் பரத நாட்டியம் இந்தியன் பைன் ஆர்ட்ஸ்சங்கத்தின் ஆதரவின் கீழ்வாணி மகாலில் இரவு 9-30க்கு நடைபெறும்.

இன்றைய மற்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

மியூசிக்அக்கடமி சார்பில் அக்கடமிமண்டபத்தில்

பி. ப. 1-30:- கல்யாண சர்மா- பாட்டு, ராதாசுந்தரேசன்-வயலின், நாகை சௌந்தரராஜன்- மிருதங்கம்.

பி. ப 3. 00: ரி. கே. கோவிந்தராவ்-பாட்டு, எம் எஸ். அனந்தராமன்- வயலின், கே. வேலுக்குட்டி நாயர்-மிருதங்கம்,

பி. ப. 5. 30: கே. வி. நாராயணசாமி- பாட்டு, திருப்பாற்கடல் வீரராகவன்- வயலின், பாலக்காடு ரகு- மிருதங்கம்.

இரவு 8 30: மணக்கால் ரங்கராஜன்- பாட்டு, வி. சேதுராமையா- வயலின், உமையாள்புரம் சிவராமன்- மிருதங்கம்.

இரவு 9. 30 இலங்கை குமாரி கீதாஞ்சலி- பரத நாட்டியம்

(இமையாணன் நிருபர்)

## கிளிநொச்சி ப.ச. பாராட்டு

பரந்தன், புதன்

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள பூநகரி மகாதேவாப் பாலத்தைக் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும், இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டை மேலும் நான்கு அடி உயர்த்த வேண்டுமென்றும், ஏழை விவசாயிகளின் நீர்வரியை அகற்ற வேண்டுமென்றும், ஆட்சிமன்றத்தில் குரல் எழுப்பியமைக்காக ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ இரத்தினத்தை கிளிநொச்சிப்பட்டினசபை பாராட்டுவதுடன் அவர்மென்மேலும் கிளிநொச்சித் தொகுதிக்குத் தம்மால்இயன்றசேவை

புதிய பல்கலைக்கழகம்

## 'தமிழர் பாரம் பரியங்களை பாதுகாக்க வேண்டும்'

உருத்திரபுரம், புதன்

'ஏற்கனவே இலங்கைச் சர்வகலாசாலைகளில் படித்த படித்துவரும் தமிழ்மாணவ

சி. க. வேலாயுதபிள்ளை எழுதிய கடிதத்தில் ... வாறு ... கடிதத்தில் அவர் ... தெரிவித்துள்ளார்

## நெடுந்தீவு மீனவருக்கு வீடமைப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

நெடுந்தீவில் வீடில்லாது கஷ்டமுறும் மீனவர்களுக்காக வீடமைப்புத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுவருகிறது.

நெடுந்தீவில் வாழும் மீன

டுள்ளது.

நேற்று நெடுந்தீவுக்கு விஜயம் செய்த யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, தீவுப் பகுதி எம். பி. திரு. கா. பொ இரத்தினம், மீன்பிடிக் கூட்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தனது இலட்சியமாகக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

உரிமையைக் கோருவதும் உரிமைக்காகப் போராடுவதும் தவறல்ல; இதை யாரும் தவறென்று சொல்லவும் துணியமாட்டார்கள். ''பயனை எதிர்பாராது கடமையைச் செய்'' என்ற கீதோபதேசத்தைச் சொன்னால் இக்காலத்தில் எல்லோரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஆனால் உரிமையைக் கோரும் பொழுது கடமையைச் செய்யத் தவற கூடாது என்பதை யாரும் ஒப்புக்கொள்வர் இதைத்தான் பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா வைபவத்தில் எடுத்துக்காட்டியிருந்தார்.

தொழிலாளரின் சக்தி மகத்தானது. அந்த சக்தியை அவர்கள் தவறான வழிகளில் பிரயோகிக்கக் கூடாது என்பதில் அரசாங்கத்துக்கும் அக்கறை இருக்கிறது. அவர்களின் சக்தி அநியாயமாக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டதால்தான் தொழிற்சங்கப் போட்டிகளைத் தவிர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் ஒரு தொழிலுக்கு என்ற அமைப்பு இன்றியமையாதது.

அரசியல்கட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் தொழிற்சங்கங்கள் இருப்பதால்தான், கட்சி அரசியல் நோக்கத்துடன் போட்டித் தொழிற்சங்கங்கள் ஏற்படவும் தொழிலாளர்கள் தமக்குள்ளேயே மோதிக்கொண்டு தமது உரிமைகளைப் பெறமுடியாதிருக்கவும் தொழிலாளரைச் சுரண்டும் முதலாளிமார் இதைப் பயன்படுத்தவும் வாய்ப்பேற்படுகிறது. அரசியல்கட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் தொழிற்சங்கங்கள் இயங்குவதையும் ஒரு தொழிலுக்குப் பல சங்கங்கள் தோன்றுவதையும் தடுத்தால்தான் பிரதமர் எதிர்பார்ப்பது போல் அரசாங்கசேவையிலும் அரசாங்க நிறுவனங்களிலும் லஞ்ச ஊழல், ஒழுங்கீனம் முதலிய கேடுகளை ஒழிப்பதற்கு ஆலோசனைக் குழுக்கள், தொழிலாளர்சபைகள் உதவமுடியும் என்பது மட்டுமல்ல இந்த நாட்டில் சுரண்டலும் ஒழிந்து உண்மையான சோஷலிஸ சமுதாயம் மலரமுடியும் என்று துணிந்து சொல்லலாம்.

---

55 வயது ஓய்வுத் திட்டம்

# தளர்த்துமாறு ஐந்து தொழிற்சங்கங்கள் கோரிக்கை

கோட்டை, புதன்

அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட 55 வயது ஓய்வு பற்றிய விதியை தளர்த்துமாறு அரசாங்க தொழிற் சங்கங்கள் ஐந்து கூட்டாகச் சேர்ந்து அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

தொழிற்சங்க உறுப்பினர் பலர் இவ்விதியினால் பாதிக்கப்படவிருக்கிறார்கள் என இத்தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவித்தனர்.

அரசாங்க எழுதுவினைஞர் சேவைச் சங்கம், ஸ்ரீலங்கா அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அரசாங்க ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், பொதுச் சேவை தொழிற் சங்க சம்மேளனம் ஆகிய இந்த ஐந்து சங்கங்களும் கூட்டாக அடுத்த வாரத்தில் இதுபற்றி கூடி ஆராயலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பிரச்னையை மனிதாபிமானத்துடனேயே தாம் நோக்குவதாக ஒரு தொழிற் சங்கப் பிரமுகர் தெரிவித்தார். எழுதுவினைஞர்கள், சிறு தொழிலாளர்கள் வீதியில் திரியும் நிலைமை இச்சடுதியான நடவடிக்கையினால் ஏற்படுமெனவும் ஏற்கனவே இத்திட்டத்தினால் வேலையிழந்தவர்கள் தங்கள் குடும்பத்தை வாழ்வித்து வந்த இந்தத் தொழில்களிலிருந்து ஒய்வு பெற்றதனால் மிகவும் கஷ்டமும் இன்னலும் அடைவதாகத் தமக்குப் பலர் அறிவித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

— —

## அலுமாரி உடைத்து களவு

அம்பன், புதன்

நாகர்கோயில் கரையூர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் உள்ள அலுமாரி உடைக்கப்பட்டு அதிலிருந்த மணிக்கூடு, பிஸ்கட் பெட்டிகள், வெண் கட்டிப் பெட்டிகள் ஆகியன களவாடப்பட்டுள்ளதாக பாடசாலைத் தலைமையாசிரியர் பருத்தித்துறைப் பொலிஸில் புகார் செய்துள்ளார். இதுபற்றி பொலிஸ் விசாரணை செய்கிறது.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

## பாதுகாக்க வேண்டும்'

உருத்திரபுரம், புதன்

'ஏற்கனவே இலங்கைச் சர்வகலாசாலைகளில் படித்த படித்துவரும் தமிழ்மாணவ மாணவிகளால் தமிழ் நாகரீகம், கலாச்சாரம், பாரம்பரியம் முதலிய சிலங்கள் மாய்ந்துமடிந்துவருகின்றன ஆதலால் புதிதாக அமைக்கப்படும் பல்கலைக்கழகத்தில் இந்தச் சூழ்நிலை ஏற்படாத வகையில் தமிழர் நாகரிகம், கலாச்சாரம், பாரம்பரியங்கள் பாதுகாக்க வேண்டும்,

வடஇலங்கையில் அமைக்கும் சர்வகலாசாலைபற்றி ஆலோசனைக்கூட்டம் ஒன்று கூட்டவிருக்கும் தபால் அமைச்சர் திரு. குமாரசூரியருக்கு பல்கலைக்கழகம் எவ்வாறு அமைய வேண்டும் என ஆலோசனை கூறி அகில இலங்கை காந்தி சேவாசங்கத்தின் காரியதரிசி திரு. சி. க. வேலாயுதபிள்ளை எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

க்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசியல் ஆதிக்கம் புகாத வகையில் தகுதி, நேர்மை, கட்டுப்பாடுகளை செயல்படுத்தக்கூடிய கல்விமான்களின் நிர்வாகத்தில்இந்தச் சர்வகலாசாலை அமைவது நல்லது.

சர்வகலாசாலை அமைப்பு நிர்வாகத்தில் தகுதிவாய்ந்த வெளிநாட்டு கல்விமான்களின் ஆலாசனைகள் பேருதவியாகவிருக்கும்.

பழைய தமிழ் இலக்கியங்களும் மரபுகளும் புதுமையின்பேரில் அழித்தொழிக்கப்படுவதை தடைசெய்ய வேண்டும்.

---

# யாழ். மரக்கறி வகைகளுக்கு தெற்கில் பெரும் கிராக்கி

மீசோட்டமுல்லை, புதன்

யாவத்தை என்னும் இடத்தில் போயா நாட்களில் நடைபெறும் தேசிய சந்தையில் யாழ்ப்பாண மரக்கறி வகைகளுக்கும், மாம்பழம், வாழைப்பழம். போன்ற பழவகைகளுக்கும் மிகுந்த கிராக்கி ஏற்பட்டுள்ளது.

மலைநாட்டுப்பகுதிகளில் இருந்துவரும் மரக்கறிவகைகளிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் இருந்துவரும் மரக்கறி, பழவகைகளை கொழும்பு மக்கள் மிகவும் விரும்பிவாங்குவதாக இங்குள்ள விற்பனைப்பகுதியினர் தெரிவித்தனர்.

எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து மரக்கறிவகைகளையும், பழவகைகளையும் கொழும்புக்கு உடனடியாகப் பெற்றுக் கொண்டுவர போக்குவரத்து தொழிலாளர் தாமதம் போன்றதடைகள் இருப்பதாகவும் இவற்றை சீர்செய்ய யாழ்ப்பாணம் விற்பனை இலாகா நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இங்குள்ள விற்பனைப்பகுதியினர் தெரிவித்தனர். (வி நி)

---

## கல்முனையில் மனிதஉரிமை தினவிழா

சாய்ந்தமருது, புதன்

கல்முனையில் மனித உரிமைகள்தினம் கொண்டாடப்பட்டது. கல்முனை பாத்திமா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு கல்முனை அநாதை விடுதிப் பொறுப்பாளரான திருமதி பாபரிஆக்டன்பவல் தலைமை வகித்தார்.

கல்முனை சாகிராக்கல்லூரி அதிபர் ஜனாப் எஸ் எச் எம் ஜமீல், அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் அதிகாரி திரு லஷ்மன் பெரேரா. பாத்திமாக் கல்லூரி அதிபர் திரு எம் இம்மானுவல் ஜனாப்கள் எம் ஐ எம் மஜீத், ஏ பி இப்ராஹிம் ஆகியோர் உரையாற்றினர்

...

## பஜெட்

வல்வெட்டித்துறை, புதன்

கடைவேலிக் கிராம சபையில் மாதாந்தக்கூட்டம் அதன் தலைவர் திரு க. சி மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

சபையின் புதிய வருட வரவு மதிப்பீடாக ரூபா 99,656-06 சதம் என்றும் செலவு ரூபா 96,488-66 சதமென்றும் தெரிவிக்கப்பட்டது. வீதிகள் திருத்தம்செய்வதற்கு ரூபா 25,000, சந்தைகள் திருத்தம் செய்ய ரூபா 6,000, வெள்ள வாய்க்கால், குளம், கிணறுகள் திருத்தச்செய்ய ரூபா 4,000, பாலுணவுக்கு ரூபா 1500 ஒதுக்கப்பட்டிருக்கிறதாகவும் அறிவிக்கப்பட்டது.

அல்வாய் மேற்கிலுள்ள சந்தையை குத்தகைக்கு கொடாமல் கிராமசபையே வரியை அறவிடவேண்டும் என்றும் துன்னாலையில் இலவச ஆயுள்வேத வைத்திய சாலை ஒன்று திறப்பது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

---

யாழ்ப்பாணம், வியாழன்

நெடுந்தீவில் வீடில்லாது கஷ்டமுறும் மீனவர்களுக்காக வீடமைப்புத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுவருகிறது.

நெடுந்தீவில் வாழும் மீனவர்களில் வீடில்லாது கஷ்டமுறுபவர்களின் நலனை முன்னிட்டு 'முள்ளிவளவு' என்னும் இடத்தில் 4 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டு வீடமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது ஆனால் இக்காணியைப் பெறுவதில் பெரும் பிரச்னை ஏற்பட்டதால் வேறோர் இடத்தில் தற்போது காணி சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று நெடுந்தீவுக்கு விஜயம் செய்த யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, தீவுப் பகுதி எம். பி. திரு. கா. பொ இரத்தினம், மீன்பிடிக் கூட்டுத்தாபன அதிகாரி திரு. எஸ் வேலாயுதம் ஆகியோர் இடங்களைப் பார்வையிட்டு கடற்கரை யோரமாகவுள்ள 10 ஏக்கர் காணியை பணம் கொடுத்து வாங்குவதென முடிவுசெய்தனர்

இதன்படி 10 ஏக்கர் காணியிலும் அரசாங்கச் செலவில் சுமார் 200க்கதிகமான வீடுகள் அமைக்கப்பட்டு மீனவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது (மாவி. நி)

---

# கம்யூனிஸ்ட் கட்சியின் லட்சியம் பற்றி விளக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

''இன்று தனக்கென ஒரு மகத்தான பாதையில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிநடைபோட்டுக்கொண்டிருக்கிறது.''

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபன புனரமைப்புத் திட்டத்தின்மீது நடந்த விவாதத்தில் கம்யூனிஸ்ட்கட்சி வடமாகாணத்தின் உதவி அமைப்பாளர் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

''கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகள் அரசியல் லாபத்தை அடிப்படையாகக் கொண்டமையல்ல. மனித சமுதாயத்தின் சுபீட்ச வாழ்வை அதன் இலட்சியமாக, அடிப்படைக்கொள்கையாக வைத்து இயங்குவது கம்யூனிஸ்ட் இயக்கம். அதன் நோக்கங்கள் இந்தத் தலைமுறையில் நிறைவேறுமற்போகலாம். அடுத்த தலைமுறையினும் நிறைவேறுமற் போகலாம். அதைப்பற்றிக் கவலைப்படாமல் வருங்காலச்சந்ததியினருக்கு வளமான வாழ்வு அமைக்க வழிகாட்டிவிட்டுப் போகும்புனிதமானபணியை செய்துகொண்டிருக்கிறோம்.

எம்முடன் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதுஎமது பலத்தின் அளவுகோல் அல்ல, எப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதே கேள்வி. கொள்கைப்பற்றற்ற இரண்டுலட்சம் உறுப்பினர்கள் தேவையில்லை. எந்தக் காலகட்டத்திலும் எப்படியான சோதனைகளிலும் எதையும் தாங்கும் இதயத்துடன் கட்சியின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள்தான் தேவை. இன்று எம்முடன் இருப்பவர்கள் சிறிய தொகையானாலும் வைரம் பாய்ச்சப்பட்டவர்கள். இந்த சிறிய தொகையினர்தான் லட்சோப லட்சம் உறுப்பினர்களைக்கொண்ட அரசியல் கட்சிகள் செய்யமுடியாத மாற்றங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.''

— —

## இலங்கையருக்கு பாராட்டு

பருத்தித்துறை, புதன்

அண்மையில் நடந்தேறிய புதுடில்லி யுனெஸ்கோ மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட திரு. எம். அற்புதநாதனின் ஆராய்ச்சிக்கட்டுரை மிகச் சிறந்ததாகக் கணிக்கப்பட்டது. 'வெளிக்கள மாணவர் நடவடிக்கை' என்ற தலைப்பில் இக்கட்டுரை வாசிக்கப்பட்டது. பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளும் இதைப் பாராட்டினர். விஞ்ஞானக் கல்வி அதிகாரியான திரு. அற்புதநாதன் பருத்தித்துறையைச் சேர்ந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

......

## ப. ச. தீர்மானம்

சங்கானை, புதன்

கூட்டுறவு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சங்கானை கிழக்குப் பகுதியையும் மேற்குப் பகுதியையும் ஒன்றாக இணைத்து சங்கானைப் பட்டினசபை எல்லைக்குள் அமைக்க வேண்டுமெனக் கோரி சங்கானைப் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தீர்மானப் பிரதிகள் கூட்டுறவுப்பகுதி ஆக்க ஆணையாளருக்கும் உள்ளூர் ஆட்சி உள்நாட்டு விவகார மந்திரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

---

நாராயணசாமி- பாட்டு, திருப்பாற்கடல் வீரராகவன்- வயலின், பாலக்காடு ரகு- மிருதங்கம்.

இரவு 8 30: மணக்கால் ரங்கராஜன்- பாட்டு, வி. சேதுராமையா- வயலின், தஞ்சாவூர் உபேந்திரன்-மிருதங்கம் குருமூர்த்தி- கடம்

தமிழ் இசைச்சங்கத்தின் ஆதரவின்கீழ் ராஜா அண்ணாமலை மன்றத்தில்-

இரவு 6 00: செம்மங்குடி ஸ்ரீநிவாசஐயர்- பாட்டு, கிருஷ்ணன்- வயலின், இராமபத்திரன்-மிருதங்கம், நாகராஜன்-கஞ்சிரா.

இரவு 9.30கே எஸ். நாராயணசுவாமி- வீணை வி.வி. சுப்பிரமணியம்-வயலின், ரி கே மூர்த்தி- மிருதங்கம்.

இந்தியன் பைன்ஆர்ட்ஸ் சங்கத்தின் ஆதரவின்கீழ் வாணிமகாலில்

பி ப 3 30: ஆனந்தாபால சுப்பிரமணியம்- பாட்டு, ரி வி, ரமணி-வயலின் கே. சஞ்சிவி- மிருதங்கம்.

இரவு6.00 டாக்டர் பிஞசபாணி-பாட்டு, எம் சந்திர

---

## எம். ஜி. ஆர். மன்றம் பாடப் புத்தகங்கள் அன்பளிப்பு

அம்பன் புதன்

மன்றங்கள் தொண்டாற்றும்பொழுது நன்கறிந்து தொண்டாற்ற வேண்டும். மன்றங்கள் ஆற்றும் சேவை மக்கள் நன்மை பயக்கக் கூடிய வகையில் அமைவது முக்கியம் மன்றங்கள்சேவை புரிவதும் பொதுத் தொண்டாற்றுவதும் வழக்கமானதே ஆனால் இந்த மன்றம் ஆற்றிய சேவை புதிய தொரு சகாப்தமாக அமைந்துள்ளது, மன்றங்கள் வீண்விரயம் செய்யும் பணத்தை இந்தமன்றம் கைக்கொண்ட முறையை முன்மாதிரியாகக் கொண்டு தொண்டாற்றி வருமானால் நாட்டில் வறிய மாணவர்களின் கல்விநிலையில் மறுமலர்ச்சி ஏற்படலாமென்பதில் எவ்விதசந்தேகமுமில்லை என்று வடமராட்சிப் பகுதி விளையாட்டுப்போதனாசிரியர் திரு சு கதிர்காமத்தம்பி ஒருவைபவத்தில் கலந்துரையாற்றுகையில் தெரிவித்தார்

பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையில் அடுத்தாண்டு 2ம் வகுப்பில் கல்வி பயிலவிருக்கும் 126 மாணவர்களுக்கு வேண்டிய சகல பாடப்புத்தகங்களையும்பருத்தித்துறை எம். ஜி. ஆர். மன்றம் நன்கொடையாக வழங்கியது மன்றத்தால் வழங்கப்பட்ட பாடப் புத்தகங்களை இப் பாடசாலைத்தலைமை ஆசிரியர் மாணவர்களுக்கு வழங்கினார்.

---

பி. பண்டிதர் கா பொ இரத்தினத்தை கிளிநொச்சிப்பட்டினசபை பாராட்டுவதுடன் அவர்மென்மேலும் கிளிநொச்சித் தொகுதிக்குத் தம்மால்இயன்றசேவைகளைச் செய்ய வேண்டுமென்றும் கிளிநொச்சி பட்டினசபைத்தலைவர் திரு. ச. சு. முருகேசுதலைமையில் நடந்த கிளிநொச்சிப்பட்டின சபை மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

......

## மேலதிக தபால் சேவகர்

வேலணை, புதன்

வேலணையிலுள்ள 4 வட்டாரங்களுக்கும் மண்கும்பான் பகுதிக்கும் ஒரு தபால் விநியோகஸ்தர்கடமையாற்றுவதல் இவ்வட்டாரங்களிலுள்ள மக்களுக்கு கடிதங்கள் தாமதமாகவே கிடைக்கின்றன. இக்குறையை நீக்கும்பொருட்டு மேலதிகமாக ஒரு தபால் விநியோகஸ்தரை நியமிக்குமாறு வடபகுதி பெரும்பாகத் தபாலகத்தோர் அத்தியட்சரையும் தபால் அமைச்சரையும் வேலணை கிராமசீர்திருத்தச் சங்க செயலாளர் கேட்டிருந்தார். வடபகுதி பெரும்பாகத் தபால் கந்தோர் அத்தியட்சர் திரு மு நடராசா அளித்துள்ள பதிலில் 'வருகிற நிதி வருடத்தில் மேலதிக தபால் ஊழியர் நியமனத்திற்கென போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் சங்கத்தின் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்' எனக் குறிப்பிட்டார்.

---


## விற்பனைக்கு

கார்:

நல்ல நிலையில் உள்ள CL A 40 கார் விற்பனைக்கு உண்டு. விஜயநாதன் தபாற்கந்தோர் அருகாமை, கொக்குவில். 2593


---

## மரண அறிவித்தல்

விசுவநாதர் வேலுப்பிள்ளை

செல்லம்மாவின் அன்புக் கணவரும், ருகம அரசினர் வைத்தியசாலை எக்ஸ்றே டெக்னீஷியன் விநாயகமூர்த்தி, வேலணை மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் நடேசபிள்ளை, செல்வி பரமேஸ்வரி ஆகியோரின் தந்தையும் சுசீலாவின் மாமனாருமான விசுவநாதர் வேலுப்பிள்ளை சிவபதமடைந்தார். பூதவுடல் நாரந்தனை வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று 24-12-70 காலை 10 மணிக்கு தகனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 2603

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org